2024 - இதழ் 03

இலவசம்

பங்குனி - 2024

# உள்ளான மனிதன்

மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

# உள்ளான மனிதன்

மாதாந்தர சஞ்சிகை - இலவசம் 2023 - இதழ் 03

## ஆண்டவர் இயேசு சொன்னார்:

**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.**

உள்ளூர் சபையின் தொடர்புகளுக்கு

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

## 2021 - இதழ் 03


பக்கம் **4**

### இயேசுகிறிஸ்து மாறாதவர்

அவ்விதமாகவே அவர் எமக்காக தமது ஜீவனைக் கொடுத்து எமது பாவங்களுக்காக மரித்து, பாவத்திலும் பிசாசின் கட்டுகளிளுமிருந்து எமக்கு விடுதலை தந்தார்.

பக்கம் **6**

### நித்திய ஜீவனுக்கு ஈடு உண்டோ?

சில மனிதர்கள், தங்கள் வாழ்க்கையிலே ஒன்றை அடையும்படிக்கு, தங்கள் வாழ்க்கையில் உள்ள வேறு சில காரியங்களை இழந்து விடுவதற்கு அல்லது மற்றவர்கள் வாழ்க்கையிலுள்ள ஏதாவது காரியங்களை பணயம் வைப்பதற்கு ஆயத்தமாக இருக்கின்றார்கள்.

பக்கம் **13**

### பிரசங்கக் குறிப்புகள்

வாழ்நாட்களிலே நாம் அநேக துன்பங்களை எதிர்நோக்கினாலும், அநாதி தேவனே நமக்கு அடைக்கலமாக இருக்கின்றார். அவரை நம்பியிருக்கின்றவர்களை அவர் முடிவிலே தேவ ராஜ்யத்திற்கு கொண்டு போய் சேர்ப்பார்.

பக்கம் **15**

### புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.


**கிரேஸ் (ற்)ரபனக்கல்**


**PLACE OF WORSHIP**
210 Silver Star Blvd., Unit #807
Scarborough, ON M1V 5J9, Canada

**MAILING ADDRESS**
7700 Markham Road, P.O. Box 3052
Markham, ON L3S 4T1, Canada

☎ 416.613.2909

gtachurch.ca/contact

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி 15ம் பக்கத்திலிருந்து...

**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**

... பங்குனி 1, 2, 7, 12, 17, 18, 20, 23, 24, 25, 26, 27, 29, 30, 31

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**

... பங்குனி 1, 2, 3, 5, 6, 8, 11, 12, 13, 17, 18, 20, 22, 23, 27, 31

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி உண்டு**

... பங்குனி 1, 3, 5, 6, 7, 11, 12, 13, 20, 22, 31

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**

... பங்குனி 2, 6, 12, 14, 16, 18, 19, 20, 21, 22, 28, 31

**சமரசமான வாழ்க்கை வேண்டாம்**

... பங்குனி 1, 2, 4, 5, 6, 8, 11, 12, 13, 19, 20, 22, 25, 28

**தெய்வீக ஆசீர்வாதங்கள்**

... பங்குனி 9, 10, 12, 17, 18, 21, 23, 24, 25, 29, 31

**தேவனுடைய சித்தம் நிறைவேறட்டும்**

... பங்குனி 4, 10, 16, 17, 18, 23, 25, 26, 27, 29

**தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை**

... பங்குனி 2, 3, 6, 8, 9, 11, 12, 13, 15, 17, 19, 21, 22, 26, 27, 29, 30

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**

... பங்குனி 2, 16, 17, 18, 21, 29

**பொறுமையோடு காத்திருங்கள்**

... பங்குனி 2, 14, 17, 18, 19, 23, 25, 26, 28, 29

**தேவ நீதி வெளிப்படும்**

... பங்குனி 5, 11, 13, 14, 17, 18, 20, 23, 28, 29, 30

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**

... பங்குனி 4, 6, 8, 10, 11, 15, 19, 21, 23, 24, 27, 30

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**

... பங்குனி 1, 3, 6, 10, 15, 17, 30, 31

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**

... பங்குனி 5, 6, 7, 8, 10, 11, 16, 19, 27, 30

# இயேசுகிறிஸ்து மாறாதவர்

போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். மத்தேயு 8:2-3 வசனங்களில் குஷ்டரோகி ஒருவன் வந்து இயேசுகிறிஸ்துவைப் பணிந்து: ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான். இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான், என்று வாசிக்கிறோம்.

அந்த மனிதன் கர்த்தரிடத்தில் கேட்டுப் பெற்றுக்கொண்டான். அவனது வியாதி மிகவும் கொடியது. ஆயினும் இயேசுவின் வல்லமையும் அவரது அன்பும் எல்லாவற்றிலும் பெரியது என்று விசுவாசித்தான், அதை அறிக்கை பண்ணினான். இயேசு தனக்கு இரங்கி இலவசமாய் தன்னைச் சுகப்படுத்துவார் என்று அவரது அன்பை விசுவாசித்தான்.

கர்த்தர் அவனுக்கு என்ன செய்தார்? அவர் தமது கையை நீட்டி அவனைத் தொட்டு எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். தம்மை விசுவாசித்த அந்த மனிதனை குணமாக்கும்படியான அவரது சித்தம் எல்லைகள் அற்றதாய், பெரிதாயிருந்தது. அதினாலே அவர் குஷ்டரோகியாயிருந்த அவனை முதலாவதாய்த் தொட்டார். அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். அவன் குஷ்டரோகம் நீங்கிக் குணமடைந்தான். நம்மீது அன்பு செய்யும் இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது என்று பரிசுத்த வேதாகமத்தில் காண்கிறோம். இயேசுகிறிஸ்துவினாலே அந்தக் கிருபை வெளிப்பட்டது. அவரே உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியாயிருக்கிறார். அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது: இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை. எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கின்றவரான இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது, நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. நான் அவைக

ளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன், அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள் வதுமில்லை. நானே நல்ல மேய்ப்பன், ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன் என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்லியுள்ளார்.

அவ்விதமாகவே அவர் நமக்காக தமது ஜீவனைக்கொடுத்து நமது பாவங் களுக்காக மரித்து, நமக்கு பாவத்திலும் பிசாசின் கட்டுகளிளுமிருந்து விடு தலை தந்தார். இயேசுகிறிஸ்து நமக்காகப் எப்போதுமே பிதாவினிடத்தில் பரிந்து பேசுகின்றவராயிருக்கிறார்.

**இயேசு நம்மை அறிந்திருக்கிறார்.**
**இயேசு நமக்கு நித்திய ஜீவனைத் தருகிறார்.**
**இயேசு நாம் கெட்டுப்போவதை ஒருபோதும் அனுமதிப்பதில்லை.**
**இயேசு நமக்காக தமது ஜீவனைக் கொடுத்துள்ளார்.**
**இயேசு நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.**
**இயேசுவின் கையிலிருந்து யாரும் நம்மைப் பறித்துக்கொள்ள முடியாது.**
**நமது இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.**

பிரியமான சகோதரனே சகோதரியே,

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன், என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது, உங்கள் ஆத்து மாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்று கூறி ஆறுதல் தர அழைக்கும் கர்த்தர், நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களாகிய தம்முடையவர்களை வானத்து நட்சத்திரங்களைப்போல் பெருகப்பண்ணும்படி கானானுக்கு அழைத்து வந்த தேவன் உண்மையுள்ள வர். கர்த்தரில் மகிழ்ந்திருங்கள். அவர் உங்களை ஆசீர்வதிப்பார்.

எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞாயிறு காலை 10:00 மணிக்கு நேரலையில் **www.gtachurch.ca/live** இணையதளத்தின் வழியாக தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அழைக்கின்றேன்.

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

# நித்திய ஜீவனுக்கு ஈடு உண்டோ?

வாழ்க்கையிலே பல சவால்கள் வந்தபோதும், தங்கள் பிள்ளைகள் நன்றாகப் படிக்க வேண்டும், தாங்கள் கடந்து வந்த கஷ்டங்களை தங்கள் பிள்ளைகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்ற மனதுடன் ஒரு தம்பதியினர் அயராது உழைத்து வந்தார்கள். தங்கள் மகனானவன் தலைதூக்கி விட்டால், வாழ்க்கையின் அன்றாட செலவுகளை இலகுவாக சந்தித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் இருந்தார்கள். ஆண்டுகள் கடந்து சென்ற பின்பு, மகனானவன் படிப்பை முடித்த பின்பு, காரியாலயமொன்றிலே ஒரு வேலையை பெற்றுக் கொண்டான். இந்த நிலையிலே, அவனுடைய தகப்பனானவர், எதிர்பாராத விபத்தொன்றிலே அகப்பட்டதால், வேலை செய்ய முடியாதபடிக்கு அவருடைய சரீரத்திலே நோவுகள் ஏற்பட்டிருந்தது. பல மாதங்கள் கடந்து சென்ற பின்பு, அவர்கள் வாடகைக்கு இருந்த வீட்டுச் சொந்தக்காரன், உங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட பின்னடைவுகள் காரணமாக சில மாதங்கள் பொறுத்திருந்தேன், ஆனால் உங்கள் வாடகைப் பணத்தை தாமதமாக செலுத்தி வருகின்றீர்கள், கடந்த மாதத்திற்குரிய வாடகைப் பணத்தின் பாக்கியும் இன்னும் செலுத்தப்படவில்லை. இது இப்படியே நீடிக்குமாக இருந்தால், இந்த மாதத்துடன் வேறு இடத்தை பார்ப்பது நல்லது என்று தகப்பனானவரிடம் கூறினார். இன்று எங்களுடைய மகனுடைய சம்பள நாள், அவன் வீடு திரும்பியதும், அந்தப் பணத்தை உங்களிடம் தவறாமல் செலுத்தி விடுவோம் என்று தாயானவள் வீட்டு சொந்தக்காரனை வேண்டிக் கொண்டாள்.

மாலையிலே வீடு திரும்பிய மகனானவன், தன் சம்பளக் காசை தன் தகப்பனானவரிடம் கொடுத்தான். தகப்பனானவர் மகனை நோக்கி: மகனே, பணம் வழமையான சம்பளத்திற்கு மிக அதிகமாக இருக்கின்றதே, இவ்வளவு பணம் உனக்கு எப்படி கிடைத்தது என்று ஆச்சரியத்தோடு கேட்டார். அது, ஒன்றுமில்லை அப்பா, நேற்று ஒரு முக்கியமான கிரிகெட் போட்டி ஒன்று நடை பெற்றது. காரியாலயத்திலே வேலை செய்யும் சக ஊழியர்கள் சிலர் கணணி வலைத்தளத்தினூடாக பந்தயம் (Betting) கட்டியிருந்தார்கள். நானும் அவர்களோடு சேர்ந்து என் சம்பளத்தை பந்தயம் கட்டினேன். நான் பந்தயம் கட்டிய அணி ஜெயித்ததால் எனக்கு இரண்டு மடங்கு பணம் கிடைத்தது என்று கூறினான். தான் கேள்விப்படுவதை நம்பமுடியாத நிலையுடன் அவன் தகப்பனானவர் அவனை நோக்கி: அப்படியானால், நீ பந்தயம் கட்டிய அணி தோல்வியடைந்திருந்தால் என்ன நடந்திருக்கும் எனக் கேட்டார். ஏன் அப்பா, நடக்காத ஒன்றைக் குறித்து அலட்டிக் கொள்கின்றீர்கள். நான்தான் ஜெயித்துவிட்டேனே என்றான். தகப்பனானவர் அவனை நோக்கி: மகனே, வீட்டு வாடகையும் அதன் கடந்த மாதத்தின் பாக்கியும் கட்ட வேண்டும், என்னுடைய மருத்துவ செலவுகள் ஒருபக்கம், உன் தங்கச்சிக்கு கல்லூரி பணம் கட்ட வேண்டும், குடும்பம் தினந்தோறும் உண்ண வேண்டும் என்று நாங்கள் யாவரும் உன்னை நம்பியிருக்கின்றோம் என்று நீ அறிந்திருந்தும், உன் சம்பளத்தை சூதாட்டத்திலே போடுவதற்கு எப்படி உனக்கு மனம் வந்தது? நீ எங்கள் வாழ்க்கையை சூதாட்டத்திலே பந்தயப் பொருளாக வைத்தாயே, எங்கள் வாழ்க்கை உனக்கு அவ்வளவு அற்பமாக தோன்றியதா என்று தகப்பனானவர் மனவேதனையோடு கேட்டார்.

சில மனிதர்கள், தங்கள் வாழ்க்கையிலே ஏதாவது ஒன்றை அடையும்படிக்கு, தமது வாழ்க்கையில் உள்ள ஒரு சில காரியங்களை இழந்துவிடுவதற்கோ அல்லது மற்றவர்கள் வாழ்க்கையிலுள்ள ஏதாவது காரியங்களை பணயம் வைப்பதற்கோ ஆயத்தமாக இருக்கின்றார்கள். எந்த காரியத்திற்காக நம் வாழ்க்கையிலுள்ள எவற்றை நாங்கள் பணயம் வைக்கின்றோம் என்று நாம் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட சம்பவத்திலே, மகனானவனுடைய குறித்த மாதத்திற்குரிய சம்பளத்தை இழந்து போனால், அந்தக் குடும்பத்தினர், வாடகைப் பணத்தை செலுத்த முடியாது போனால், அவர்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டும். தகப்பனானவரின் மருத்துவ சிகிச்சைக்குரிய கட்டணங்கள் செலுத்துப்பட வேண்டும், அதை செலுத்தாவிடின், தகப்பனாரின் உயிருக்கு ஆபத்து வரலாம். தங்கச்சியின் கல்லூரி கட்டணம் செலுத்தப்படாவிடின், அவளது படிப்பு பாதியில் நிறுத்தப்படும். இப்படியாக அந்த குடும்பத்தினர் ஒரு நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்படலாம். அதை அறிந்திருந்தும் குடும்பத்திற்கு ஏற்படக்கூடிய அந்த நிர்க்கதியான நிலையை குறித்து பொருட்படுத்தாமல், அதை பணயமாக வைத்து, அந்த மகனானவன் தன் சம்பளப் பணத்தை பந்தயம் கட்டினான்.

ஒரு மனிதன் மீட்பராகிய இயேசு கிறிஸ்து வழியாக உண்டாகும் பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெற்றுக் கொள்ளாதிருந்தால், அவன் ஏழையாக இருந்தாலும், பணக்காரனாக இருந்தாலும், துன்மார்க்கமான வாழ்வில் இருந்தாலும், சன்மார்க்கமான வாழ்வில் இருந்தாலும், உலக அளவுகோலின்படி கற்றவனாக இருந்தாலும், கல்லாதவனாக இருந்தாலும், மத வைராக்கியமுள்ளவனாக இருந்தாலும், மத வைராக்கியமற்றவனாக இருந்தாலும், கடவுள் நம்பிக்கை உடையவனாக இருந்தாலும், கடவுள் நம்பிக்கையற்றவனாக இருந்தாலும், உலகத்திலே அதிகாரமுள்ளவனாக இருந்தாலும், அதிகாரமற்றவனாக இருந்தாலும், உலக கணிப்பின்படி நன்மை செய்கின்றவனாக இருந்தாலும், தீமை செய்கின்றவனாக இருந்தாலும், யாராக இருந்தாலும், எந்த நிலையில் இருந்தாலும் அவனுக்குள் பாவத்தின் வித்து இருப்பதால் அவன் கோபாக்கினைக்கு நியமிக்கப்பட்டவனாக இருக்கின்றான். நாமும் அவ்வண்ணமாகவே, அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்தோம். தேவனானவர் நம்மை உயிர்ப்பித்தார். அவைகளில் நாம் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டோம். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. இந்த உன்னதமான இரட்சிப்பை

உண்டு பண்ணும் பொருட்டு, இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய விலைமதிக்க முடியாத பரிசுத்த இரத்தத்தை சிந்தி, மனித குலத்தின் பாவ பரிகாரத்தை செய்யும்படி, தம்மை தாமே கிரயமாக ஒப்புக் கொடுத்து, சிலுவையிலே பலியானார். (எபேசியர் 2:1-8)

ஏழையாக இருந்தாலும், பணக்காரனாக இருந்தாலும், துன்மார்க்கமான வாழ்வில் இருந்தாலும், சன்மார்க்கமான வாழ்வில் இருந்தாலும், உலக அளவுகோலின்படி கற்றவனாக இருந்தாலும், கல்லாதவனாக இருந்தாலும், மத வைராக்கியமுள்ளவனாக இருந்தாலும், மத வைராக்கியமற்றவனாக இருந்தாலும், கடவுள் நம்பிக்கை உடையவனாக இருந்தாலும், கடவுள் நம்பிக்கையற்றவனாக இருந்தாலும், உலகத்திலே அதிகாரமுள்ளவனாக இருந்தாலும், அதிகாரமற்றவனாக இருந்தாலும், உலக கணிப்பின்படி நன்மை செய்கின்றவனாக இருந்தாலும், தீமை செய்கின்றவனாக இருந்தாலும், யாராக இருந்தாலும், எந்த நிலையில் இருந்தாலும், இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கின்றவன் எவனும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, பிதாவாகிய தேவன்தாமே ஜீவ மார்க்கத்தை உண்டுபண்ணினார்.

இந்த உன்னதமான அழைப்பை ஏற்றுக்கொண்டு, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகின்றவர்கள் யாவரும் பரலோக ராஜ்யத்தின் உடன் சுதந்திரர்களாகும்படியான வாக்குத்தத்தத்தை பெற்றிருக்கின்றோம். இந்த இரட்சிப்பினால் உண்டாகும் கன மகிமையை சற்று சிந்தித்துப் பாருங்கள்:

**நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். (1 பேதுரு 1:9)**

மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே. தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே. (ரோமர் 8:14-17)

இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன் நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்

கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள் நாமும் மறுரூபமாக்கப்படுவோம். (1 கொரி 15:51-52)

நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள் (1 யோவான் 3:1)
இத்தகைய ஒப்பற்ற அழைப்பை பெற்ற நாம். எவ்வளவாய் ஜாக்கிரதையுள்ளவர்ளாக வாழ வேண்டும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சிகொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம். (எபிரெயர் 2:4)

இந்த மகத்துவமான அழைப்பை இன்று சிலர் பணயம் வைத்து, மறுபடியும் தங்களை பாவத்திற்கு அல்லது பாவத்திற்கு வழிவகுக்கும் காரணிகளுக்கு ஒப்புக் கொடுக்கின்றார்கள். அதாவது, பரலோகத்திலே நித்திய வாழ்வை இழந்து போகக்கூடிய நிலைமை ஏற்படலாம் என்று அறிந்தும் தங்கள் மாம்ச இச்சைகளை நிறைவேற்ற இடங் கொடுக்கின்றார்கள். அதன் முடிவில் நித்திய மரணத்தை பெற்றுக் கொள்வதற்காக, நித்திய வாழ்வை அற்ப காரியங்களுக்காக விற்று விடுகின்றார்கள்.

ஒரு ஊரிலே வசித்து வந்த சில வாலிபர்கள் ஒன்று சேர்ந்து, கடற்கரையோரமாக சென்று, கடலிலே குளித்து, உன்று, குடித்து உல்லாசமாக இருப்போம் என்று திட்டமிட்டார்கள். அந்த கடற்கரையோரத்திலே, சில வேளைகளிலே முதலைகள் வந்து சேருவதால், அங்கு செல்வது ஆபத்தானது என ஊர் மக்கள் அறிந்திருந்தார்கள். அந்த வாலிபர்கள், அங்கு செல்வது நல்லதல்ல என்று அந்த ஊரிலுள்ள மூப்பர்களில் ஒருவர் அவர்களுக்கு நல் ஆலோசனை கூறினார். அந்த வாலிபர்களில் ஒருவன் அவரை நோக்கி: கடந்த இரண்டு வருடங்களில் எத்தனை முறை அங்கு முதலைகள் வந்தது? எத்தனை பேரை கொன்று போட்டது? அப்படியாக ஏதும் ஊரில் நடக்கவில்லையே. பின்னர் ஏன் மக்களை பயமுறுத்தி அடக்கி ஆளுகின்றீர்கள் என்று கூறினான். அந்த வாலிபர்கள் மாதந்தோறும், ஒரு சனிக்கிழமையன்று கடற்கரைக்கு சென்று தாங்கள் விரும்பியபடி, முழுகி, மதுபானம் அருந்தி, உண்டு, உல்லாசமாக இருந்து வருவது வழக்கமாயிற்று. பல மாதங்களாக அவர்கள் போக்கும் வரத்துமாக இருந்து வந்தார்கள். ஒரு நாள் அவர்கள் அங்கு சென்று நீந்துகின்ற வேளையிலே, முதலைகளால் தாக்கப்பட்டார்கள், சிலர் படு காயங்களோடு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்கள், ஆனால் சிலரை அந்த முதலைகள் கொன்று போட்டது. இந்த வாலிபர்கள் தங்கள் அற்ப ஆசைகளை நிறைவேற்றும்படிக்கு தங்கள் உயிர்களை பணயம் வைத்தே சென்றார்கள்.

இதற்கொத்ததாகவே இன்று சில மனிதர்கள், தேவ அழைப்பைப் பெற்றும், காலங்கள் கடந்து செல்லும் போது, தேவ ஆலோசனைகளை அற்பமாக எண்ணிக் கொள்கின்றார்கள்.

அவற்றுள் சில உதாரணங்கள்: மதுபானம் அருந்துவதில் என்ன தவறு? நெறிகெட்ட திரைப்படங்களை பார்த்தால் என்ன? நான் விரும்பிய நபரை என் இஷ்டப்படி திருமணம் செய்து கொண்டால் என்ன? ஞாயிறு ஆராதனைக்கு செல்லாவிட்டால் தேவன் என்னை கொன்று விடுவாரோ? என்று கேள்விகளுக்கு மேல் கேள்விகளை கேட்கின்றார்கள்.

**இப்படி கேள்விகளை கேட்கின்றவர்கள், தங்களிடம் தாங்களே கேட்க வேண்டிய ஒரு கேள்வி ஒன்று உண்டு.**

**நான் நித்திய வாழ்வை பெற்றுக் கொள்ள வாஞ்சையாக இருக்கின்றேனா அல்லது நித்தி வாழ்வை பணயம் வைத்து அற்ப காரியங்களை நிறைவேற்ற ஆசையாக இருக்கின்றேனா?**

வழுவிப் போகின்ற இதயமுள்ளவர்கள் மாம்ச இச்சைகளை நிறைவேற்ற வகை தேடுவார்கள். நித்திய வாழ்வின் மேன்மையை அறிந்தவர்கள், அதை பெற்றுக் கொள்ளும்படி, தேவனுக்கு சித்தமானால் தங்கள் உயிரை கொடுப்பதற்கும் ஆயத்தமாயிருப்பார்கள்.

ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன் என்று தேவ ஊழியராகிய பவுல் தனக்கிருந்த உலக கல்வி, அந்தஸ்து யாவும் உதறித்தள்ளிவிட்டார். (பிலிப்பியர் 3:7-11)

வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலை பெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள். வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள். கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை. அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு

அலைந்தார்கள். இவர்கள் தங்கள் உன்னதமான அழைப்பை வாழ்விலும் சாவிலும் இழந்து போகாதபடிக்கு தங்கள் விசுவாசத்தை காத்துக் கொண்டார்கள். (எபிரெயர் 11:35-38)

அன்றியும், பரலோகராஜ்யம் நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான். மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லா வற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான் என்று நம்முடைய ஆண்ட வராகிய இயேசு கூறியிருக்கின்றார். (மத்தேயு 13:44-46)

இன்று நாம் நம்முடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்பவர்களானால், நாம் பேசும் ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு செயலும், இருதயத்தின் தியானமும் நித்திய வாழ்வை பெற்றுக் கொள்வதற்கு ஏற்றனவைகளாக இருக்க வேண்டும். சிறிதானவைகளாயிருந்தாலும், பெரிதானவைகளாக இருந்தாலும், மாம்ச இச்சைகளை நிறைவேற்றும் பொருட்டு, நித்திய வாழ்வை பணயம் வைக்காதிருப்போமாக. அழிந்து போகும் இந்த உலக காரியங்களுக்காக, நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவ னுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின இயேசுவை விற்றுப் போடாதிருப்போமாக. அவரே நம்முடைய இரட்சிப்பின் தேவனா னவராய் இருக்கின்றார்.

ஆண்டவராகிய இயேசு இந்த பூமியிலே தம்முடைய திருப்பணியை நிறை வேற்றும்படிக்கு பன்னிரண்டு விசேஷித்த சீஷர்களை தெரிவு செய்திரு ந்தார். அவர்களில் ஒருவன் யூதாஸ்காரியோத்து. மற்றய சீஷர்களைப் போல, இவனும் இயேசுவோடு சுமார் மூன்றரை வருடங்கள் இருந்தவன். இயேசுவின் போதனைகளையும், அவர் செய்த அற்புதங்களையும் நேரடி யாக கேட்டவன், பார்த்தவன். இயேசுவோடு உணவு உண்டவன். ஒரு சம யம், இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தா னியாவுக்கு வந்தார். அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள். லாசருவின் சகோதரியாகிய மார்த்தாள் பணிவிடை செய்தாள். லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான். அப்பொழுது லாசருவின் மற்றய சகோதரியாகிய மரியாள் விலையேறப்பெற்ற களங்க மில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமள த்தினால் நிறைந்தது. அதைக் கண்ட யூதாஸ்காரியோத்து: இந்தத் தைல த்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதெ ன்ன என்றான். அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல் லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன் னான். (யோவான் 12:1-6). மற்றய சீஷர்களைப் போல, இவனும் வியாதி யுள்ளவர்களைச் சொஸ்தமாக்கவும், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ண வும், மரித்தோரை எழுப்பவும், பிசாசுகளைத் துரத்தவும் ஆண்டவராகிய இயேசுவிடமிருந்து அதிகாரம் பெற்றிருந்தும் (மத்தேயு 10:8). பொருளா

சையை தன் இருதயத்தில் தங்க இடங் கொடுத்தவன். அந்த பொரு ளாசை வழியாக பிசாசானவன் அவனுக்குள் உட்புகுந்தான்.

அவன் பிரதான ஆசாரியர்களிடத்திலும் சேனைத் தலைவர்களிடத்திலும் போய், அவரைக் காட்டிக்கொடுக்கும் வகையைக் குறித்து அவர்களோடே ஆலோசனை பண்ணினான். அவர்கள் சந்தோஷப்பட்டு, அவனுக்குப் பணங்கொடுக்க உடன்பட்டார்கள். அதற்கு அவன் சம்மதித்து, ஜனக்கூ ட்டமில்லாத வேளையில் அவரை அவர்களுக்குக் காட்டிக்கொடுக்கும்படி சமயந்தேடினான். அதாவது, அவன் தற்செயலாக இயேசுவை காட்டிக் கொடுக்கவில்லை. மாறாக திட்டமிட்டு, ஆலோசனை பண்ணி, சந்தர்ப் பத்தை தேடிக் காத்திருந்து, இயேசுவை காட்டிக் கொடுத்தான். அவன் இயேசுவை பணத்திற்காக பந்தையம் கட்டினான். அவரை முப்பது வெள் ளிக் காசுக்கு விற்றுவிட்டான். உலக போக்கிலே அங்கீகாரம் பெற்றிரு க்கும் பொருளாசையின் முடிவை பாருங்கள். உன்னத அழைப்பை கொடு த்த உன்னதருக்கே துரோகம் செய்து, முடிவிலே அவன் தன் உயிரையே மாய்த்துக் கொண்டான்.

பிரியமான சகோதர சகோதரிகளே, உலகத்திலும் உலகத்திலுள்ளவை களிலும் அன்புகூராதிருங்கள் ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவ னிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ள வைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத் தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம் தேவ னுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திரு ப்பான். (1 யோவான் 2:15-17)

## கிறிஸ்துவுக்காக இந்த உலக மேன்மைகளை துறந்தவர்களும், இழந்தவர்களும் ஒருபோதும் தரித்திரராவதில்லை.

ஒரு மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? மனுஷகுமாரன் தம்மு டைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார் அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார். (மத்தேயு 16:25-27)

நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்க ளின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவர் கொஞ்ச காலம் பாடநுபவிக்கிற உங்களை ஸ்திரப்படுத்தி, திடப்படுத்தி வழிநடத்திச் செல்வாராக. **ஆமேன்**!

# *அநாதி தேவன் உன் அடைக்கலம்*

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வாசகம் - உபாகமம் 33:27

சில வேளைகளிலே, மனிதர்கள் தங்களை குறித்து பேசும் போது, தங்கள் பூர்வீகங்களைக் குறித்தும், தாங்கள் இன்னாருடைய பிள்ளைகள் என்றும், அதனால் தங்களுக்கு இருக்கும் சலுகைகளையும் சொல்லிக் கொள்வார்கள். அப்படி அறிக்கையிடுவதால், தாங்கள் பாதுகாப்பாக இருக்கின்றோம் ஒருவரும் எங்களை அணுக முடியாது என்று மனதிலே ஒரு திருப்தி அடைகின்றார்கள். இவ்வண்ணமாக நாம் "அநாதி தேவனே உனக்கு அடைக்கலம் அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்" என்று சொல்லிவிட்டு, நாம் நினைத்த பிரகாரம் வாழ முடியாது.

ஒரு வாலிபன் ஒரு போலிஸ் அதிகாரியின் மகனாக இருந்தால், அவன் தன் தகப்பனுடைய பெயருக்கு பங்கம் ஏற்படாதபடிக்கு தன் வாழ்க்கையை வாழ வேண்டும். அவனுடைய தகப்பனானவர், அவன் வாழ்க்கைக்கு விரோதமாக வரும் பிரச்சனைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் அதிகாரம் உள்ளவராக இருக்கின்றார். ஆனால், அவன் தன் வாழ்வை பொல்லாப்புக் விலக்கி காத்துக் கொள்ள வேண்டும். அவன் தவறான செயல்களை செய்து, குற்றத்தில் அகப்படும் போது, நீதிபதிக்கு முன்பாக நின்று நான் இன்னாருடைய மகன் என்று சொல்லிக் கொள்வதால் பலன் ஏதும் இல்லை.

அதைப் போலவே, தேவனுடைய ஊழியராகிய மோசே, தேவ ஜனங்களைப் பார்த்து, இந்த பூமியிலே நீ அநேக காரியங்களை காண்பாய் ஆனால் "அநாதி தேவனே உனக்கு அடைக்கலம் அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்" என்பதை நீ அறிந்து உணர்ந்து, அந்த அடைக்கலத்திற்குள் உன்னை வைத்துக் கொள் என்று ஆலோசனை கூறினார்.

இந்த பூமியிலே மனிதர்களில் அநேகர் தங்கள் வாழ்க்கையிலே அநேக துன்பங்களை எதிர் நோக்குகின்றார்கள். யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள், ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும் பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும் என்று முன்கூட்டியே நடக்கவிருக்கும் காரியங்களை குறித்து கர்த்தராகிய இயேசு கூறியிருக்கின்றார். ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதினால் அவன் வாழ்க்கையில் துன்பம் வராது என்று பரிசுத்த வேதாகமம் கூறவில்லை. மாறாக, கிறிஸ்துவின் நிமித்தம் நாம் பாடுகளை சகிக்க வேண்டும் என்றே எழுதப்பட்டிருக்கின்றது. இவ்வண்ணமாக, முன்னோடிகளாகிய பரிசுத்தவான்களின் வாழ்க்கையிலே பல துன்பங்களும் பாடுகளும் உண்டாயிருந்தது. அவர்களில் ஒருவராகிய பவுல், கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்ததாலும், தேவனுக்கு பிரியமான பரிசுத்த வாழ்வை பற்றியும் அவர்

பேசியதால், மனிதர்களும் அதிகாரிகளும் தங்கள் மனதிலே குத்துண்டு, அவரை அதிகமாக துன்பப்படுத்தினார்கள்.

நாங்கள் தேவனை அறிந்திருக்கின்றோம் என்று கூறி, அறியாமையில் வாழ்ந்து வந்த மனிதர்களே, பவுலை அதிகமாக உபத்திரப்படுத்தினார்கள். நாம் பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நாங்கள் தேவனையே நம்பியிருந்தோம் என்று அவர் சாட்சி பகர்ந்திருக்கின்றார். பரிசுத்தவான்களில் அநேகர், கிறிஸ்துவின் நிமித்தம் உபத்திரவப்படுத்தப்பட்டு இரத்த சாட்சிகளாக கொடூரமாக கொல்லப்பட்டார்கள். ஆனால், தங்களை தேவன் ஒருபோதும் தேவன் மறந்து போகின்றவர் அல்லர் என்பதை அவர்கள் நன்றாக அறிந்திருந்ததால் "அநாதி தேவனே எனக்கு அடைக்கலம் அவ ருடைய நித்திய புயங்கள் எனக்கு ஆதாரம்" என்ற அந்த வாக்குத் தத்தத்திலே உறுதியாக தரித்திருந்தார்கள்.

அப்படியாக கொல்லப்பட்டவர்களின் கதை முடிந்து விட்டதே என்று சிலர் எண்ணிக் கொள்ளலாம். சற்று சிந்தித்துப் பாருங்கள்! நூற்றியிருபது வருடங்களுக்கு முன் வாழ்ந்த உங்கள் முற்பிதாக்கள் இப்போது பூமியில் இல்லை. அவர்கள் இந்த பூமியிலே வாழ்ந்த நாட்களைவிட, இந்தப் பூமியில் இல்லாதிருக்கின்ற நாட்கள் அதிகமாக இருக்கின்றது. அதுபோலவே நாமும் கொஞ்சக் காலம் இந்தப் பூமியிலே வாழ்கின்றோம். கர்த்தர் வரத் தாமதமானால் நாம் இந்த பூமியில் இல்லாதிருக்கின்ற வரு டங்கள் நாம் இந்த பூமியில் வாழ்ந்த வருடங்களைவிட அதிகமாக இருக் கும். ஆனால் ஒரு மனிதன் தேவனை தன் அடைக்கலமாக கொண்டு, அவருடைய கற்பனைகளின்படி வாழ்ந்தால், அவன் இந்தப் பூமியில் இருந்தால் என்ன இல்லாதிருந்தால் என்ன அவன் என்றென்றும் தேவனோடு இருப்பான்.

வாழ்நாட்களிலே நாம் அநேக துன்பங்களை எதிர்நோக்கினாலும், அநாதி தேவனே நமக்கு அடைக்கலமாக இருக்கின்றார். அவரை நம்பியிருக்கின்றவர்களை அவர் முடிவிலே தமது தேவ ராஜ்யத்திற்கு கொண்டு போய் சேர்ப்பார்.

இரட்சகராகிய இயேசு கிறிஸ்துதாமே, தமக்கு முன்பாக இருந்த பாடுகளை அறிந்திருந்த போதும், அவற்றை பிதாவின் சித்தப்படி, மனிதகுலம் இரட்சிப்படையும்படி, தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார். அதே போலவே, அந்த இரட்சிப்பின் நற்செய்தி, உலகம் முழுவதும் அறிவிக்கப்படத்தக்கதாக, இயேசுவின் சீஷர்களும் தங்களை கிறிஸ்துவின் திருப்பணிக்கு ஒப்புக் கொடுத்தார்கள். அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட பல துன்பங்கள் உபத்திரவங்கள், நாச மோசங்கள், அவமானங்கள், நிந்தைகள் மத்தியிலும் சோர்ந்து போகாமல் தங்கள் பிரயாசத்தின் பலனை கண்டு ஆறுதலடைந்தார்கள். இவர்கள் தாமே அநாதி தேவனை தங்கள் அடைக்கலமாக்கிக் கொண்டார்கள். அதுபோலவே நாமும் என்ன நடந்தாலும் அநாதி தேவனை நம் அடைக்கலமாகவும், அவருடைய நித்திய புயங்களை நம் ஆதாரமாகவும் கொண்டிருப்போமாக.

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும்
இணையத் தளத்தில் (**INTERNET WEBSITE** இல்)
தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம். https://gtachurch.ca/im]

# பெற்றுக் கொண்ட பெரிதான விடுதலை

**கொலோசெயர் 1:13**

**இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.**

இந்த உலகத்திலே அந்தகார கிரியைகளை தங்கள் மாம்சத்தின் புயத்தினால் நடப்பிக்கின்றவர்களுக்கு நாம் பயந்து வாழ்ந்த நாட்கள் இருந்தது. ஓயாத தொல்லைகளினாலே, இளைப்படைந்து, மனச் சமாதானம் இல் லாமல் நாளைய நாளைக் குறித்த நம்பிக்கையற்றுப் போயிருந்தது. துன்மார்க்கருடைய துர்ச் செயல்களுக்கு பயந்து, அவர்கள் கேட்பதை கொடுத்துவிட்டால் உயிர்தப்பி வாழ்ந்து விடலாம் என்று எண்ணியிருந்தது போல, சத்துருவானவனை எதிர்த்து மேற்கொள்ள முடியாதிருந்ததால், அவனோடு இணைந்து, அவனுடைய அந்தார கிரியைகளுக்கு உடன் பட்டால் வாழ்ந்து விடலாம் என்று படுக்கையில் நித்திரையில்லாமல் மனம் அங்கலாய்த்த நாட்கள் இருந்தது. ஆனால், அவை யாவும் ஒரு நொடிப்பொழுதிலே அகன்று போய்விட்டது. உலகத்தை ஜெயங் கொண்ட ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சராக ஏற்றுக் கொண்ட கணப்பொழுதிலே, தீராத தொல்லைகளை உண்டு பண்ணிவந்த அசுத்த ஆவிகள் ஓடிப்போய்விட்டது. இந்த உலகத்திலிருக்கிறவனிலும் நம்மோடிருக்கும் ஆண்டவர் இயேசு பெரியவர் என்று அறிந்ததினாலே உண்டான மனச்சமாதானம், பயத்தை புறம்பே தள்ளிவிட்டது. மாம்சத்திலே போர் செய்து அழிந்து கொண்டிருந்த நாட்கள் முடிவடைந்து, தேவபெலனத்தினாலே உலகத்தை ஜெயிக்கும் தைரியம் மனதிலே உண்டாகி விட்டது. ஒருபோதும் கைவிடாமல் என்னை நடத்திச் செல்லும் மேய்ப்பராகிய இயேசு என்னோடிருக்கின்றார் என்ற ஆனந்தம் மனதிலே பெருகிக் கொண்டே இருக்கின்றது. இப்படியாக ஆண்டவராகிய இயேசுதாமே தன் வாழ்விலும், தன் குடும்பத்திலும் நடப்பித்த ஆச்சரியயமான விடுதலையைக் குறித்து ஒரு விசுவாசியானவன் நன்றியுள்ள இருதயத்தோடு தியானித்தக் கொண்டிருந்தான். ஆம், பிரியமானசகோதர சகோதரிகளே, பாதாளத்தின் வல்லடிக்கு நம்மை விலக்கிகாத்த ஆண்டவராகிய இயேசுவின் பாடுகளை குறித்து இந்த நாட்களிலே அதிமாக தியானம் செய்கின்றோம். அவருக்காக புலம்பி அழுவதற்காக அல்ல. மாறாக பிதாவாகிய தேவனுடைய திருச்சித்தத்தை குமாரனாகிய இயேசு நிறைவேற்றி முடித்தது போல, அவருடைய குமாரர்கள் குமாரத்திகளாக அழைக்கப்பட்ட நாமும், பிதாவுடைய சித்தத்தை நம் வாழ்வில் நிறைவேற்றி முடிப்பதே நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும்.

**ஜெபம்:** அந்தகார இருளிலிருந்து ஆச்சரியமான ஒளிக்கு என்னை அழைத்த தேவனே, நான் உம்முடைய புண்ணியங்களை தியானித்து, நன்றியோடு உம்மைத் துதிக்கும் உள்ளத்தை எனக்குத்; தந்தருள்வீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**சனி | பங்குனி 2** 📖 மாலை வாசகம் – யாக்கோபு 1:27

# மேலான நோக்கம் என்ன?

> **2 கொரிந்தியர் 4:16**
>
> **எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.**

ஒரு விசுவாசியானவன், ஆண்டுதோறும் தன் தகப்பனானவர் இந்த உலகத்தைவிட்டு கடந்து சென்ற நினைவு கூறுதலின் நாட்கள் வரும் போது, தன் தகப்பனானவர், பல இக்கட்டான சூழ்நிலைகளின் மத்தியிலே பல சாவல்களை எதிர்நோக்கிய போதும், அந்தக் கஷ்டங்கள் ஒன்றையும் பொருட்படுத்தாது, குடும்பத்தின் எதிர்காலத்திற்காக செய்த தியாகங்களை நினைத்து நன்றியுள்ள இருதயத்தோடு ஆண்டுகள் தோறும் முன் குறித்த நாளிலே, பல தானதர்மங்களையம் நற்கிரியைகளையும் செய்து வந்தான். அதைவிட மேலாக, எதற்காக தன் தகப்பனானவர் கடுமையாக உழைத்தாரோ, அந்த நோக்கம் தன்னில் நிறைவேறும்படிக்கு செம்மையான வழியிலே நடந்து உத்தமனாக அவன் வாழ்ந்து வந்தான். நித்திய ஜீவனுக்கென்று அழைப்பை பெற்ற அருமையன சகோதர சகோதரிகளே, விசேஷமாக இந்நாட்களிலே, உலகம் முழுவதும் பரந்திருக்கும் பல விசுவாசிகள், அநேக தானதர்மங்களையும், நற்கிரியைகளையும், ஒறுத்தல்களையும் செய்து வருகின்றார்கள். குறித்த நாட்கள் முடிவடைந்ததும் பலர் தங்கள் வழமையான வாழ்க்கைக்கு திரும்பிவிடுவார்கள். அந்த வழமையான வாழ்க்கை என்ன என்பதை இன்று நீங்கள் உங்கள் வாழ்க்கையை மையமாக வைத்து சிந்தித்துப் பாருங்கள். பிதாவாகிய தேவன்தாமே, தம்முடைய ஒரே பேறான குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பினதன் முதன்மையான நோக்கம் என்ன? ஏழைகள் பட்டினியில்லாமல் வயிறாற போஷிகப்பட வேண்டும் என்பதற்காகவா? அல்லது வறியவர்கள் யாவரும் இந்த உலகில் கல்விகற்ற செல்வந்தராக மாற வேண்டும் என்பதற்காகவா? அவைகளைவிட மேலான நோக்கமொன்று உண்டு. ஒருவரும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதற்காக அவர் ஆண்டவராகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். “ஒருவரும் கெட்டுப்போகாமல்” என்ற வார்த்தையிலே “ஒருவரும்” என்று சொல்லிய அந்த வார்த்தையின் வழியில் முதலாவதாக நான் இடம்பெற வேண்டும். ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிகொண்டாலும் தன் ஆத்துமாவை கெடுத்துக் கொண்டால் அவனுக்கு இலாபம் என்ன? இந்த உலகத்தோடு அழிந்து போகும் நற்பெயர் மாத்திரம் அவனுக்கு மிகுதியாக இருக்கும். எனவே, நற்கிரியைகளை விட்டுவிடாமல் தொடர்ந்து செய்யுங்கள், அதற்கு மேலாக, உள்ளான மனிதன் நாளுக்கு நாள் ஆண்டவர் இயேசுவை போல மாறும்படியாக உங்களை ஒப்புக் கொடுங்கள்.

**ஜெபம்:** நித்திய ஜீவனக்கென்று என்னை அழைத்த தேவனே, நான் அனதினமும் உம்முடைய திருக்குமாராகிய இயேசுவின் சாயலிலே வளர்ந்து பெருகும்படி என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இந்நாட்களின் தியானம்

இன்றைய நவீன உலகிலே பண்டிகைகள் பெருநாட்கள் வரும் முன்னதாகவே, எத்தகைய பரிசுப் பொருட்களை பரிமாறலாம் என்ற எண்ணக் கருத்துக்களை (Ideas) கொண்ட பட்டியலை அத்துறையிலே தேர்ச்சி பெற்றவர்கள் தயாரித்து வழங்குகின்றார்கள். திருமணநாளை சிறப்பாக செய்து முடிப்பதற்காக திருமண நாளை திட்டமிட்டு செயற்படுத்துகின்றவர்களை நியமித்துக் கொள்கின்றார்கள். கர்த்தருடைய பாடுகள், மரணம், உயிர்தெழுதலை குறித்து அதிகமாக தியானிக்கும்படி நியமிக்கப்பட்டிருக்கும் இந்த நாட்களிலே, எவற்றைக் குறித்து நாம் தியானம் செய்ய முடியும் என்ற எண்ணக் கருத்துகளை பரிசுத்த வேதாகமத்திலே குறிப்பாக நிருபங்களிலே நாம் காணலாம். இன்றைய நாளிலே கொலோசேயர் நிருபத்தில் மூன்றாம் அதிகாரத்திலே குறிப்பிடப்பட்ட அருமையான ஆலோசனைகளில் சிலவற்றைக் நாம் சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம். முதலாவதாக, மேலானவைகளை நாம் தேடும்படிக்கு இந்த உலகத்திற்குரிய மாம்சத்தின் இச்சைகளை உண்டுபண்ணுகின்ற நம்முடைய அவயவங்களை நாம் அழித்துப் போடவேண்டும். அதாவாது நம்முடைய சரீரம் விரும்பும் எல்லாவற்றிற்கும் நாம் இடம் கொடுக்காமலும், மாம்சத்தின் எண்ணங்களை மறுபடியும் உயிரடையச் செய்யாமல், முற்றாக அழித்துப்போட வேண்டும். அவைகள் நம்முடைய சிந்தனையில் தோன்றும் போது, அவை நம்முடைய சிந்தனையிலே நிலைநிற்க நாம் இடம் கொடுக்கக்கூடாது. இன்று பலர் தங்கள் இருயத்தில் உண்டாயிருக்கும் பொருளாசையை தேவனுடைய ஆசீர்வாதம் என்று எண்ணிக் கொள்கின்றார்கள். விக்கிரக ஆராதனையாகிய பொருளாசையானது விசுவாசிகளை விசுவாசத்தைவிட்டு வழுவிப்போகப் பண்ணிவிடுகின்றது. போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதா யம் என்ற அறிவின் பெருக்கமானதே தேவனுடைய ஆசீர்வாதமாக இருக்கின்றது. இந்த உலகத்திற்குரியவைகள் நம் இருதயங்களை நிறைத்துவிடாதபடிக்கு, நாம் அவற்றிற்கு ஒரு எல்லையை உண்டு பண்ண வேண்டும். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்ற நிச்சயத்தை உணர்ந்தவர்களாய், நம்மிடம் உள்ள பொருட்கள் அழிந்து போவதற்கு முன்பதாகவே, தேவநீதியின் கிரியைகளை நடப்பிப்பதற்கு நாம் அவற்றை பயன்படுத்த முடியும். பழைய மனுஷனுக்குரிய சிந்தனையின் முறைமையை களைந்துவிட்டுபுதியமனுஷனுக்குரிய சிந்தனையையுடையவராயிருங்கள்.

**கொலோசெயர் 3:9**

**பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு,**

**ஜெபம்:** மேலானவைகளை தேடும்படி என்னை அழைத்த தேவனே, என் மாம்சத்தின் எண்ணங்கள் என்னில் நிலைத்திருக்க இடங்கொடாமல், அவற்றை முற்றாக அகற்றிவிட எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள்

குறிப்பிட்ட தேசமொன்றிலே மலைப்பாம்புகளின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்ததால், குறித்த இடத்தில் வாழும் மக்களிற்கும், பலதரப்பட்ட விலங்கினங்களுக்கும் உயிர் ஆபத்து ஏற்பட்டிருந்தது. அந்த பாம்புகள் அந்த இடத்திலுள்ள மனிதர்களை விழுங்கிப்போடுவதற்கு முன்னதாக, அந்தப் பாம்புகளை அழித்துப் போட வேண்டும் என்ற சட்டம் அங்கே பிற ப்பிக்கப்பட்டது. சுருக்கமாக சொல்லப் போனால், அந்த பாம்புகள் கொன்றுபோடப்படாவிட்டால், அவை மனிதர்களைகொன்று போடும் என்பதே. இவ்வண்ணமாகவே விசுவாசிகளின் வாழ்க்கையிலே உண்டாகும் மாசு எண் ணங்களை முற்றாக அழித்துப் போடா விட்டால், அவை நாளாடைவிலே விசு வாசிகளை கொன்று போடும். அதா வது, விசுவாசிகள் என்று பெயரை தரித்துக் கொண்டு அனலுமின்றி குளிருமின்றி வாழும் வாழ்க்கைக்கு அவர்களை தள்ளிப்போடும். நம் முடைய ஆண்டவராகிய இயேசுதாமே, முற்காலத்திலே நம்மை கட்டி ப்போட்டிருந்த அடிமைத்தனத்தின் சங்கிலிகளை அறுத்து, நம்மை அந்த கட்டு களிலிருந்து விடுவித்தார். இருளினால் நிறைந்திருந்த இருத யத்திலே தம்முடைய திவ்விய ஒளியை பிரகாசிப்பித்தார். அந்த ஒளி யானது நம்மில் தொடர்ந்து பிரகாசிக்கும்படிக்கு, அவருடைய ஜீவ வார் த்தைகளின் தியானம் நம் சிந்தையிலே இரவும் பகலும் இருக்க வேண் டும். "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ள வர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்துக் கொள் ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தன ங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகா திபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாதஆவிகளின் சேனை களோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்க ளாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வா யுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்." இந்த சர்வாயுதவர்க்க மானது தேவனுடைய வார்த்தைக்குள் அடங்கியிருக்கின்றது. அவரு டைய வார்த்தையின் வழியில் நடப்பவர்கள் எல்லா காவலோடும் தங் கள் இருதயத்தை காத்துக் கொள்கின்றார்கள். அனுதின ஜெபத்தின் வழியாக அவர்கள் கர்த்தரோடுள்ள உறவிலே வளர்ந்து பெருகுகி ன்றார்கள். பிரியமானவர்களே, மாம்சத்தின் எண்ணங்கள் உங்கள் இரு யதத்தை ஆண்டு கொள்வதங்கு முன்னதாக, தேவன் தரும் பெலத்தி னாலே அவ ற்றை முற்றாக அழித்துக் போடுங்கள்.

**எபேசியர் 6:10**

கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமை யிலும் பலப்படுங்கள்.

**ஜெபம்**: அன்பின் பரலோக தகப்பனே, நீர் எனக்கு ஈவாய் கொடுத்திருக்கும் அருமையான ஆலோசனைகளையும் எச்சரிப்புக்களையும் நான் அசட்டை பண்ணாதிருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எல்லாற்றையும் செய்து முடிக்கும் பெலன்

“நாங்கள் நினைத்ததை எப்படியும் நடத்தி முடிப்போம்”என்ற வார்த்தைப் பிரயோகங்களிளால் சில மனிதர்கள் தங்களைப் குறித்து பெருமை பாராட்டுவதை நாம் கேட்டிருக்கின்றோம். தேவ பிள்ளைகளாகிய நாம் இத்தகைய வார்த்தைப் பிரயோகங்களைக் குறித்து மிகவும் எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். பலவான் கையிலுள்ள அம்புகள் அவன் குறித்த இடத்திற்கு இலக்கை சென்றடையும். அவ்வண்ணமாகவே, நாமும் சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தருடைய கரத்திலுள்ள கருவிகள் என்ற சிந்தையைவிட்டு ஒருபோதும் மாறிப்போய் விடக்கூடாது. பராக்கிரமமுள்ள தேவனானவர் சகலத்தையும் செய்ய வல்லவர். அவர் செய்ய நினைத்தது ஒருபோதும் தடைப்படாது. அவருடைய சித்தம் நம் வாழ்வில் நிறைவேறும்படிக்கு அவர் செய்யும்படி நமக்கு ஒப்புவித்ததை, அவர் நினைத்த பிரகாரமாக செய்கின்றவர்களாக வாழ வேண்டும். “என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.” இந்த வார்த்தை உண்மையுள்ளது. ஆனால், நாம் இந்த வார்த்தையைக் குறித்து தவறான எண்ணங் கொள்ளாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக காணப்பட வேண்டும். “எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு” என்பதன் பொருள் என்ன என்னதை சிந்தித்துப் பாருங்கள். நம்முடைய மனதும் மாசம்சமும் விரும்புவதை செய்வது தேவ பெலன் அல்லவே. தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக செயற்படுகின்ற யாவரும் தேவனுக்கு அல்ல, இருள் அதிகாரத்திற்கே உழியம் செய்கின்றார்கள். இதை ஏற்றுக் கொள்ளவது கடினமாக இருக்கலாம். என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்.“என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான் என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு” கூறியிருக்கின்றார். மேலும், “நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்.” எனவே, தேவுவனுடைய பலத்த கரத்திற்குள் அடங்கியிருக்கின்றவர்கள், தங்கள் வாழ்க்கையில் தேவசித்தத்தை நிறைவேற்றி முடிக்கும்படி செய்ய வேண்டியவைகளை செம்மையாக செய்து முடிக்க, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதாமே அவர்களை பெலப்படுத்தி நடத்துகின்றார். பிரியமானவர்களே, எனவே நாம் உலகத்திற்கும் மாசம்சத்திற்கும் நம் வாழ்வில் இடம் கொடாமல், தேவனுடைய திருக்கரத்திலுள்ள கருவிகளாக காணப்படுவோமாக.

**பிலிப்பியர் 4:13**

என்னைப் பெலப்படுத்து கிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.

**ஜெபம்:** உம்முடைய சித்தத்தை நிறைவேற்றி முடிக்க என்னை பெலப்படுத்தும் தேவனே, என்னுடைய நினைவெல்லாம் உம்முடைய வார்த்தைக்கு உட்பட்டிருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# குறைவற்ற வேதம்

ஒரு கிராமத்திலே வாழ்ந்து வந்த மனிதனாவன், தன் அயலனுக்கு எதிராக அநியாயமொன்றை செய்துவிட்டான். தான் செய்தது அநியாயம் என்று அறிந்திருந்தும், அதை அவன் ஏற்றுக் கொள்ள மனதில்லாமல், அடுத்த வாரத்திலே கூடவிருக்கும் கிராமத்தின் மூப்பர்கள் சங்கத்தின் முன்னிலையில் எப்படி தப்பித்துக் கொள்ளலாம் என்று இரவு பகலாக சிந்தித்துக் கொண்டிருந்தான். தன் செய்கைகளை ஏற்றுக்கொள்ளும் தன் நண்பர்களோடு கலந்தாலோசித்தான். அதன்படிக்கு, அந்த ஊரின் சட்டதிட்டங்களடங்கிய யாப்புப் புத்தகத்தை மிகவும் சிரத்தையோடு வாசித்து, சட்டத்திலே ஏதாவது குறைவு இருக்கின்றதா? அல்லது தான் செய்த அநியாயத்தை நியாப்படுத்த ஏதாவது காரணங்கள் யாப்பு புத்தகத்திலே இருக்கின்றா என்று ஆர்வத்தோடு தேடி, அதைக் கண்டு பிடித்தான். அவன் கண்டு பிடித்த காரணங்களை சுட்டிக் காட்டி, மூப்பர் சங்கத்தின் முன்னிலையிலே தன் செய்கையை நியாயப்படுத்தினான். சட்டம் அப்படியாக இருக்கின்றதால், மூப்பர் சங்கம் அவனுடைய நியாயப்படுத்தலை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, அந்த அநீதியான உள்ளம் படைத்த மனிதனாவன், சட்டப்புத்தகத்தை எதற்காக இரவும் பகலும் ஆர்வத்தோடு படித்தான் என்பதை பாருங்கள். இன்று சில மனிதர்கள் தேவனுடைய வார்த்தையையும் தங்கள் சுய இலாபத்திற்காக கற்றுக் கொள்கின்றார்கள். குற்ற உணர்வில்லாமல் எப்படி வெறி கொள்வது? சபை கூடிவருதலை விட்டுவிடுவதற்கு ஆதாரங்கள் உண்டோ? நெறிகெட்ட திரைப்படங்களை பார்ப்பதற்கு தடைகள் உண்டோ? குற்ற உணர்வில்லதாமல், விவாகமாகாமல் ஆணும் பெண்ணுமாக சேர்ந்திருப்தற்கு வழிகள் உண்டோ? இப்படியாக பற்பல காரணங்களுக்காக நித்திய ஜீவனுக்குரிய வார்த்தைகளை புரட்டிப்போடும்படி வெகுவாய் துணிகரம் கொள்கின்றார்கள். ஒருவரும் தேவ வார்த்தைகளை புரட்டிப் போட முடியாது. அப்படியாக தேவ வார்த்ததையை புரட்டிப்போட முயற்சிக்கின்றவர்கள் தங்கள் வாழ்க்கையையே புரட்டுகின்றார்கள் என்பதை மறந்து போய்விடுகின்றார்கள். மனிதனுடைய ஆக்கங்களிலே குறைகள் உண்டு. ஆனால் தேவனுடைய வழி உத்தமமானது. கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது. கர்த்தருடைய வேதம் குறைவற்றது. தேவன் தம்மைப் பரிகாசம்பண்ணவொட்டார் மனிதன் எதை விதைக்கின்றானோ அதை அறுப்பான்.

**மத்தேயு 24:35**

வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை

**ஜெபம்:** ஜீவ வார்த்தைகளை எனக்கு தந்த தேவனே, நான் ஆவிக்கென்று விதைத்து ஆவியினாலே நித்தியஜீவனை பலனாக பெற்றுக் கொள்ளும் படிக்கு, உம்முடைய வழியிலே வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நாம் சுயாதீனமுள்ளவர்கள்

ஒரு ஊரிலே வசித்து வந்த விசுவாசியானவன், தன் உடன் சகோதர னொருவனுக்கு எதிராக அநீதியான காரியமொன்றை செய்துவிட்டான். அவன் சென்று வந்த சபையின் மூப்பர்கள் அந்தக் காரியத்தை விசார ணை செய்த போது. அநீதியான காரியத்தை செய்த விசுவாசியானவன், தான் செய்தது அநீதி என்பதை அறிந்திருந்தும், மூப்பர்களை நோக்கி: “சகல காரியங்களும் இரண்டுமூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலை வரப்படும்.” எனவே, நான் அநீதி செய்தேன் என்பதற்காக சாட்சிகளை கொண்டு வாருங்கள் என்று அமைதலான தொனியிலேயே கேட்டுக் கொண்டான். அவன் செய்த அநீதி யான செயலை நிரூபிப்பதற்கு சாட்சி கள் இல்லாதிருந்ததால், மூப்பர்கள் மேற்கொண்டு அந்த காரியத்தை விசா ரணை செய்ய முடியாமல், அவனு க்கு ஆலோசனை கூறி அனுப்பிவிட் டார்கள். அந்த அநீதி செய்த விசுவா சியானவன், தான் ஞானமுள்ள மனி தன் என்று எண்ணிக் கொண்டான். ஆனால், நித்திய ஜீவனுக்கென்று அருளப்பட்ட தேவ வார்த்தைகளை தன் துர்குணத்திற்கு மூடலாக பயன்படுத்துவதால், தனக்கு வரவிருக் கும் பின்விளைவுகளை உணர்ந்து கொள்ள முடியாமல் அவன் மனம் கடினப்பட்டுப் போயிற்று. தனக்கு கேடுண்டாக்கும்படிக்கே, தேவனு டைய ஜீவ வார்த்தைகளை தனக்கு இலாபமுண்டாகும்படி அவன் புரட் டுகின்றவனாக காணப்பட்டான். பிரியமான சகோதர சகோதரிகளே, மீட் பராகிய இயேசு இந்த உலகிலே தம்முடைய திருப்பணியை வெளிய ரங்கமாக ஆரம்பிக்கின்ற நாட்களிலே, சோதனைக் காரணாகிய பிசாசா னவன், வேத வார்த்தைகளை சுட்டிக் காண்பித்து, தேவ குமாரனாகிய இயேசுவை சோதித்தான். தேவனடைய நீதியானது, மீட்பராகிய இயேசு வழியாக நிறைவேறாமல் தடுக்கும்படிக்கு, அவன் வேத வார்த்தை களை அநீதிக்காக தவறாக பயன்படுத்தினான். அதைப் போலவே, அவனை சேர்ந்த மனிதர்களும், பின்மாற்றமடைந்த விசுவாசிகளும், தங்கள் சொந்த வழிகளை நியாயப்படுத்த, இரட்சிப்புக்கேதுவான வேத வார்த்தைகளை தவறான முறையிலே பயன்படுத்துகின்றார்கள். பிரியமானவர்களே, உயர்விலும், தாழ்விலும், நிறைவிலும், குறைவிலும், வேதனையிலும், சோதனையிலும் உங்கள் வாழ்வில் தேவ நீதி நிறைவேறும்படிக்கு தேவ சமுகத்திலே உங்களை தாழ்த்தி ஒப்புக் கொடுங்கள்.

**1 பேதுரு 2:16**

சுயாதீனமுள்ளவர்களாயி ருந்தும் உங்கள் சுயாதீன த்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக்கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளா யிருங்கள்.

**ஜெபம்**: இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவனே, உம்முடைய வார் த்தைகளைஎன் சுயநீதிக்காக பயன்படுத்தும்படி துணிகரம் கொள்ளும் இரு த யத்தை என்னை விட்டு அகற்றி, உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீ ராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிருபையின் ஆண்டுகள்!

கர்த்தாவே! கர்த்தாவே! என்று அவரை நம்பி வாழ்ந்து வந்த அந்த மனிதனைப் பார், அவன் இளவயதிலேயே மரித்துப் போனான். என்னைப் பார், என் வழியைப் பார், எழுபது ஆண்டுகளை கடந்து விட்டேன், இன்னும் ஆரோக்கியத்தோடு வாழ்கின்றேன் என்று ஒரு மனிதனானவன் தன் சுயநீதி நிறைந்த வாழ்க்கையை குறித்து ஒரு மேய்ப்பரானவர் முன்னிலையிலே பெருமைபாராட்டி பேசிக் கொண்டான். அதை கேட்டுக் கொண்டிருந்த மேய்ப்பரானவர் அந்த மனிதனை நோக்கி: ஐயா, நீங்கள் உங்கள் வாழ்க்கையைக் குறித்து மேன்மைபாராட்டுகின்றீர்கள். கர்த்தரை தன் நம்பிக்கையாக கொண்டு வாழ்ந்த அந்த விசுவாசியானவன், இந்த உலகிலேஉயிரோடிருந்தாலும், இந்த உலகைவிட்டுகடந்து சென்றாலும், அவன் மரித்துப் போவதில்லை, அவன் தன் தாபரமாகிய கர்த்தரோடு நீடூழியாய் என்றென்றும் வாழ்ந்திருப்பான். கர்த்தரை அறிந்தும் அறியாமல் வாழும் உங்களுக்கு ஆண்டவர் கிருபையின் ஆண்டுகளை இன்னும் கூட்டிக் கொடுத்திருக்கின்றார். ஏனெனில், ஒருவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதற்காக அவர் நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார். எனவே, உங்களுக்கு கொடுக்கப்பட்ட கிருபையின் ஆண்டுகளை மேன்மைபாராட்டுதலிலே, அழித்துக் கொள்ளாமல், நித்திய ஜீவனை அடையும்படிக்கு கர்த்தரிடத்திலே உங்களை ஒப்புக் கொடுங்கள் என்று அவருக்கு அறிவுரை கூறினார். ஆம், பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் எதைக் குறித்து மேன்மை பாராட்ட முடியும்? கர்த்த ருடைய சிலுவையைக் குறித்தும், அவர் நம்மேல் பொழியும் கிருபையைக் குறித்துமேயன்றி வேறறொன்றையும் குறித்து மேன்மைபாராட்ட முடி யாது. கர்த்தர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார் என்பதற்காக வாழ்நாள் முழுவதும் நாம் பாவத்திலும் அக்கிரமத்திலும் வாழ்ந்துவிட்டால் சரியாகிவிடுமோ? இல்லை! திறவுண்ட வாசல் அடைபட முன்பதாக, கிருபையின் நாட்களிலே மனத்தாழ்மையோடு அதனூடாக பிரவேசியுங்கள். "நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்."

**ரோமர் 6:1**

ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா?

**ஜெபம்**: என்னுடைய பாவங்களுக்குத்தக்கதாக செய்யாமல் கிருபையை பொழிகின்ற தேவனே, கிருபையின் ஆண்டுகளை ஞானமாய் பயன்படுத்தும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஒருமனதிலே இருமனம்

ஒருமனதோடும், முழுமனதோடும் நாம் தேவனை சேவிக்க வேண்டும் என்பதைக் குறித்து நாம் யாவரும் அறிந்திருக்கின்றோம். "ஒருமனதோடு" என்று சபை நடுவே நாம் கூறும் போது, சபையார் யாவரும், ஒருமனப்பட்டவர்களாக தேவனை துதிக்க வேண்டும் என்று கூறிக் கொள்கின்றோம். அது உண்மை. ஆனால், சிலவேளைகளிலே, ஒரு விசுவாசியின் வாழ்கையிலே "இருமனம்" காணப்படுகின்றது. "இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்." என்று பரிசுத்த வேதாககம் கூறுகின்றது. ஒரு விசுவாசியானவன் இருமனமு ள்ள வனாக இருக்கும் போது, அவன் எப்படி முழுமனதோடு தேவனை சேவிக்க முடியும்? அவன் தனக்குள்ளே தானே பிரிவினையுடையவனாக இருப்பதினாலே, மனத்திருப்தியற்றவனாகவும் அங்கலாய்கின்றவனாகவும் வாழ்கின்றவனாக காணப்படுவான். இன்று எப்படியாக சில விசுவாசிகள் இருமனமுடையவர்களாக வாழ்க்கின்றார்கள்? இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது. ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான் அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான் தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். ஆனால், இன்று சிலரோ, உலகப் பொருள் தேவனுடைய ஆசீர்வாதம் என்று போதித்து அதையே நாடித் தேடும்படிக்கு துர்ஆலோசனை கூறி, சில விசுவாசிகளை உலக பொருட்களை நாடித் தேடும்படி ஊக்குவிக்கின்றார்கள். இப்படியாக உலக பொருட்களை தங்கள் வாழ்வில் பெருக்கிக் கொள்ளும் விசுவாசியானவன் எந்த எஜமான னை பற்றிக் கொண்டு, எந்த எஜமானனை அசட்டை செய்கின் றார்கள் என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள். பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம் இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும் இங்கே திருடரும் கன்ன மிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள் அங்கே பூச்சியாவதுருவா வது கெடுக்கி றதும் இல்லை. அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். எனவே, அழியாமையை நாடித் தேடுங்கள் அப்பொழுது நீங்கள் பரலோக எஜமானனாகிய இயேசுவுக்கு பிரியமுள்ள சீஷர்களாக இருப்பீர்கள்.

**மத்தேயு 5:21**

**உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.**

**ஜெபம்**: நித்தியமானவைகளை தேடுங்கள் என்று கூறிய தேவனே, தவறான உபதேசங்களினாலே நான் வழிதவறிப் போய்விடாதபடிக்கு, உம்முடைய சத்தியத்திலே நிலைத்திருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சத்திய வார்த்தைகள்

ஒரு தேசத்தை அரசாண்டுவந்த ராஜாவானவர், தேசத்திலுள்ள குறிப்பிட்ட ஊரொன்றில் வசித்து வந்த மக்களுக்கு அவரசமாக செய்தியொன்றை தன் ஸ்தானாதிபதியினூடாக அனுப்பி வைத்தார். போகும் வழியிலே அந்த செய்தியை படித்த ஸ்தானாதிபதி, இந்த செய்தியில், ராஜாவானவர், அந்த ஊர் மக்களின் குறைகளை மிகவும் கடுமையாக கண்டித்து உரைத்திருக்கின்றார். இதை நான் அந்த ஊர் மக்களுக்கு கூறினால், அவர்கள் என்னையும் பகைத்து விடுவார்கள். எனக்கிருக்கும் கனத்தையும் நான் இழந்து விடுவேன். எனவே, இந்த செய்தியை நான் சற்று திருத்தம் செய்து, அந்த ஊராரின் மனதிற்கு ஏற்றபடி மாற்றம் செய்வேன் என்று கூறி, ராஜாவானவர் கொடுத்த செய்தியை மாற்றிப் போட்டான். தவறான காரியங்களை செய்து வரும் அந்த ஊர் மக்களோ, ஸ்தானாதிபதியினால் மாற்றப்பட்ட செய்தியை கேட்டபோது, ராஜாவானவர், தங்கள் வழிகளில் பிரியமாக இருக்கின்றார் என்று எண்ணி மகிழ்ச்சியடைந்தார்கள். தேசத்தின் ராஜாவின் ஸ்தானாதிபதி என்று பெயரை சூடிக் கொண்டவன், தன் பெயருக்கேற்றபடி, தன் ராஜாவிற்கு உண்மையுள்ளவனாக இருக்கவில்லை. ராஜாவானர், அந்த ஸ்தானாதிபதியின் உண்மையற்ற வாழ்க்கையை அறியும் நாளிலே, அந்த ஸ்தானாதிபதியின் நிலைமை பரிதாபமுள்ளதாக இருக்கும். அன்பில் பரிசுத்தமுள்ளவர்களாக வாழும்படிக்கு அழைப்பை பெற்ற அருமையான சகோதர சகோதரிகளே, "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது." (2 தீமோத்தேயு *3:16-17*). பரிசுத்த ஆவியானவர் வரும்போது சகல சத்தியத்தைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். ஆனால், இன்று சிலர், நாங்கள் இப்படியாக பாவம், மனந்திரும்புதல், பரிசுத்தமாகுதல், நியாயத்தீர்ப்பை பற்றி உபதேசம் செய்தால், மக்களின் நன்மதிப்பை இழந்து விடுவோம், அதனால் மக்கள் எங்களைவிட்டு போய் விடுவார்கள் என்று, சத்தியத்தை சுத்தமாக பேசாமல், தங்கள் நயவ சனிப்பினால், மக்களின் மனதை குளிரப்பண் ணும்படி பேசுகின்றார்கள். இப்படிப்பட்ட போதனைகளால் நீங்கள் இழுப்புண்டு போகாதடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள்.

**யோவான் 8:32**

**சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.**

**ஜெபம்**: அன்பில் என்னை பரிசுத்தமுள்ளவனாகும்படி வேறு பிரித்த தேவனே, பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடு காத்துக் கொள்ளும்படிக்கு, எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| திங்கள் \| பங்குனி 11 | 📖 மாலை வாசகம் – தீத்து 3:9 |
|---|---|

# காரியத்தின் கருப்பொருள்

ஒரு கிராமத்திற்கு அப்புறமாக இருந்த அழகான கடற்கரையொன்றிலே, அவ்வப்போதுமுதலைகளினால் அபாயம்ஏற்படுவதினால், அந்த கிராமத்தின் மக்களுக்கு எச்சரிப்பை வழங்கும்படிக்கு, ஒரு கண்காணியானவனை வேலைக்கமர்த்தினார்கள். அந்தக் கண்கணியானவனும், சலிப்பில்லாமல், அந்த கடற்கரைக்கு செல்லும் மக்களை தடுத்து நிறுத்தி, அவர்களுக்கு எச்சரிப்பை கொடுத்து, அந்த இடத்திலே அவர்கள் நீந்தாதபடிக்கு தடை செய்து வந்தான். ஒரு நாள் சில வாலிபர்கள் எப்படியோ அந்தக் கடற்கரைக்கு சென்று, அதனருகே பந்தடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அந்த வாலிபர்கள் இதற்கு முன்பாகவும் அந்தக் கடற்கரைக்கு சென்று எச்சரிப்பை பெற்றிருந்தார்கள். அதனால் அவர்களை மறுபடியும் கண்ட கண்காணியானவன் முன்னொரு நாட்களிலும் இல்லாததுபோல கோபமடைந்ததால், அந்த வாலிபர்களை நோக்கி: எந்தக் கணப்பொழுதிலும் உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்டலாம் எனவே இந்த இடத்தைவிட்டு உடனடியாக போய் விடுங்கள் என்று கடுமையான தொனியிலே எச்சரிப்பை வழங்கினான். அதைக் கேட்ட சில வாலிபர்கள், "நீ மரியாதையாக எங்களுடன் தயவான தொனியிலே பேசினால் நாங்கள் இங்கிருந்து செல்வோம், இல்லையென்றால், நாங்கள் தொடர்ந்து விளையாடிக் கொண்டிருப்போம்" என்று மறுமொழி கூறினார்கள். பிரியமானவர்களே, அந்தக் கண்காணியானவன், சொன்னது உண்மை. ஆனால், அந்த வாலிபர்களோ, தங்கள் உயிருக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை அறிந்திருந்தும், கண்காணியானவன் சொன்ன எச்சரிப்பின் தொனியைக் குறித்து அலட்டிக் கொண்டார்கள். முறைப்படி சொன்னால் கேட்போம் அல்லது நாங்கள் மரித்தாலும் நாங்கள் எங்கள் வழிகளை மாற்றிக் கொள்ளப்போவதில்லை என்ற அகங்காரமுள்ளவர்களாக காணப்பட்டார்கள். இவ்வண்ணமாகவே, இன்று சில விசுவாசிகளின் மனநிலையும் காணப்படுகின்றது. வாலிபர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும், அனுபவமிக்கவர்கள் கூட "இந்த செய்தியை இப்படி கூறியிருந்தால் நலமாயிருந்திருக்கும். அவர் கூறிய ஆலோசனையின் தொனி ஏற்புடையதல்ல" என்று செய்தியின் கருபொருளை உணராமல், மனந்திரும்ப வேண்டிய கிருபையின் காலத்திலே, தங்கள் நேரத்தை வீண் வாக்குவாதங்களிலே விரயப்படுத்திக் கொள்கின்றார்கள். நீங்களோ அப்படியாயிராமல் இலக்கின்மேல் கண்களை வைத்து ஓடுங்கள்.

**2 தீமோத்தேயு 2:23**

**புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து, அவைகளுக்கு விலகியிரு.**

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, நான் எப்போதும் ஜீவ வார்த்தைகளின் கருப்பொருளை உணரந்து, உம்முடைய சித்தத்தை நிறைவேற்றி முடிக்க பிரகாசமுள்ள கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | பங்குனி 12 | 📖 மாலை வாசகம் – 1 கொரி 4:5

# தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்

ஒரு கிராமமொன்றிலே வசித்து வந்த முதலாளியொருவன் ஆடு, மாடு, கோழி போன்றவற்றை கொண்ட பண்ணையொன்றை நடத்தி வந்தான். ஒரு நாள் அவன் ஆடுகளை பட்டிக்குள் திருப்புகின்ற நேரத்திலே, அப் பகுதியிலே, புதிதாக பிறந்த ஓநாயின் குட்டியொன்று அநாதரவாகயி ருப்பதை கண்டு, இரக்கங்காட்டி அதை எடுத்து, சில நாட்களாக பண் ணையை காக்கும் நாய்களின் குட்டி களோடு பராமரித்து வந்தான். அந்து குட்டி ஓநாயும், வேற்றுமை யேதுமி ன்றி, பண்ணையை காக்கும் நாய்க ளின் குட்டிகளைப் போலவே பார் வைக்கு மிகவும் அழகாகவே காட்சி யளித்தது. அதை கவனித்து வந்த அந்த பண்ணையின் முதலாளியானவன், அந்த ஓநாய், பண்ணையி லுள்ள நாயைப் போலவே வேலையாட்களோடு பழகி வருவதால், அதை அப்படியே விட்டுவிட்டான். சில மாதங்களுக்கு பின், ஒரு நாள் இரவு நேரத்திலே, அந்த பண்ணைக்குள் வந்த வேறு ஓநாய்கள், சில ஆடுகளை கடித்து காயப்படுத்தியே போது, பண்ணையிலிருந்து ஓநா யும், ஆட்டின் இரத்தத்தை ருசிபார்த்தது. அதன் பின்னர், அந்த ஓநா யும் மற்ற ஓநாய்களைப் போல சில ஆடுகளைப் பீறி சிதறடித்து விட் டது. பிரியமான சகோதர சகோதரிகளே, திருடன் திருடவும் கொல்ல வும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான் என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். திருடனானவன், நான் திருடன் என்ற பெயர் பலகையோடு, முன்குறித்து நேரத்தில் வந்து திருடுவேன் என்ற சொல்லிக் கொண்டு வருவதில்லை. அவன் திருட்டு தனமாக காரியங்களை செய்வதால், வீடு எங்கே திருந்திருக்கின்றது என் றும், எப்படி அந்த வீட்டாரை வஞ்சிக்க முடியும் என்றும் தருணம் தேடி க்கொண்டிருப்பான். அதவாது, நம்முடைய சிந்தையிலே தேவனுக்கு ஏற்புடையதல்லாத சுபாவங்களை அறிந்து, நம்முடைய இருதயத் தில் கசப்பு, பிரிவினை, வைராக்கியம் போன்றவற்றை உண்டுபண்ணு தற்கு நீடியபொறுமையோடு சந்தர்ப்பத்திற்காக காத்திருப்பான். எனவே, உங் கள் இருதயத்தை எல்லாக் காவலோடும் காத்துக் கொள்ளுங்கள். அந்த எல்லாக் காவல் என்னவென்பதை வேத வார்த்தைகள் நமக்கு தெளிவாக போதிக்கின்றது. உங்கள் இதயக்கதவானது யாருக்கு திறந்து வைக்கப் பட்டிருக்கின்றது என்பதை நீங்களே ஆராய்நது அறிந்து கொள்ளுங்கள். தேவனுடையசத்திய வார்த்தையை அப்பாற்பட்ட எந்த உறவும் உங்களு க்கு வேண்டாம். தெளிந்து புத்தியோடு விழித்திருந்து ஜெபம் செய்யுங் கள். ஆவியானவர் உங்களை வழிநடத்திச் செய்வார்.

**1 பேதுரு 5:8**

தெளிந்த புத்தியுள்ளவர்களா யிருங்கள், விழித்திருங்கள்;

**ஜெபம்**: சகல சத்தியத்திலும் என்னை நடத்திச் செல்லும் தேவனே, உம் முடைய வார்த்தையை மீறி, என் மனத்திற்கு நன்மையான தோன்றுகி ன்ற எந்த ஒரு கிரியையும் நான் நடப்பிக்காதபடிக்கு என்னை காத்து நட த்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# வாழ்விலே அந்நிய சத்தங்கள்?

ஒருஊரிலே வசித்து வந்த வாலிபனானவனுக்கு நல்ல நண்பனொருவன் இருந்தான். அந்த நண்பனாவன் கணித பாடத்திலே மிகவும் தேர்ச்சி பெற்றவனாகயிருந்தான். நாட்கள் கடந்து சென்ற போது, அந்த வாலி பனானவன் எதிர்பாராதவிதமாக ஒரு விபத்திலே அகப்பட்டதால், பாடசா லையில் கற்பிக்கப்பட்ட சில பாடங்களை தவறவிட்டுவிட்டான். முக்கி யமாக தமிழ் இலக்கணத்திலே அவ னுக்கு அதிகமாக உதவி தேவைப்ப ட்டது. ஆனால், அந்த நண்பனானவ னுக்கு அந்தத் துறையிலே தேர்ச்சி யில்லாதிருந்தால், அவனால் உதவி செய்ய முடியவில்லை. ஏனில் அவன் அறிந்ததெல்லாம் கணிதமா கவே இருந்தது. பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று சில விசுவா சிகள், அவிசுவாசிகளுடன் ஐக்கிய மாக வாழ்ந்து கொண்டு, அவர்களே தங்கள் உயிர் நண்பர்கள் என்று கூறிக் கொள்கின்றார்கள். ஒருவேளை அந்த அவிசுவாச மார்க்கத்தார், இந்த உலகத்தின் போக்கின்படி கற்றவர்களும், ஒழுக்கமாக வாழ்கின்ற வர்களுமாயிருக்கலாம். ஆனால், அவர்கள் ஆண்டவர் இயேசுவையம் அவருடைய வழிகளையும் அறியாதவர்கள். ஆண்டவர் இயேசுவோடு ஐக்கியமாயிராதவன் யாரோடு ஐக்கியமாக இருப்பான்? உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையிலே சவால்கள் எதிர்நோக்கி வரும் போது, ஆண்டவர் இயேசுவை அறியாத உங்கள் உயிர் நண்பர்களாகிய அவிசு வாசமார்க்கத்தார் உங்களுக்கு எதை சொல்லிக் கொடுக்க முடியும்? அவர்கள் தாங்கள் அறிந்தவைகளையேயன்றி வேவொன்றையும் சொல் லிக் கொடுக்க முடியாது. அவர்கள் வழியாக நீங்கள் அந்நிய சத்த ங்களை கேட்கக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டாகிவிடும். அது அவர்களு டைய தவறு அல்ல. அவர்கள் தாங்கள் அறி ந்ததை உங்களுக்கு அறி விப்பார்கள். ஆனால், நீங்களோ, நீங்கள் கற்றுக் கொண்ட வேத த்தை மீறி, உங்கள் ஆபத்து நாட்களிலே அந்நிய சத்தங்கள் உங்கள் வாழ்க் கையில் தொனிக்கும்படிக்கு இடங் கொடுக்கின்றவர்களாக இருப்பீர் கள். எனவே, தேவனுடைய ஜீவ வார்த்தைகளை மீறி உறவுக ளையும் நட்புக்களையும் ஏற்படுத்திக் கொள்வதைக் குறித்து எச்சரிக் கையாயி ருங்கள். இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கின்றது. நீங்களோ, பிதவாகிய தேவனுடைய கீழ்படிவுள்ள பிள்ளைகளாக ஜீவவார்த்தை யின் வழியிலே நடந்து கொள்ளுங்கள்.

**யோவான் 10:5**

அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவை கள் அந்நியனுக்குப் பின்செ ல்லாமல், அவனை விட் டோடிப்போம் என்றார்.

**ஜெபம்**: ஜீவ மார்க்கத்தை எனக்கு காண்பித்து தேவனே, நான் அந்த ஜீவ மார்க்கத்தைவிட்டு என் இஷ்டப்படி வழுவிப்போகாதடிக்கு உம்மைப் பற்றிக் கொண்டு வாழ எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வியாழன் | பங்குனி 14 | 📖 மாலை வாசகம் – 2 கொரி 11:13–14

# நிஜமானதை பற்றிக் கொண்டிருங்கள்

ஒரு பட்டணத்திலே, போலியான பணச் சீட்டுகள் அச்சடிக்கப்பட்டு விநியோகத்திலிருப்பதை அறிந்து கொண்ட அரச அதிகாரிகள் "போலியானவைகளை நம்பி ஏமாறாதிருங்கள்" என்ற தலைப்பிலே நாட்டு ஜனங்களுக்கு எச்சரிப்பை வழங்கினார்கள். போலியானவைகள் நிஜமான பணத் தாள்களைப் போல காட்சியளித்தாலும், நிஜமானது தனித்துவமாக சிறப்பியல்புகளை கொண்டதாக காணப்படும். எனவே போலியானவைகளை வேறு பிரித்தறிவதற்கு, நாம் நிஜமானது இன்னதென்று நன்கு அறிந்து கொள்ள வேண்டும். சில கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடையவர்கள் என்ற வேஷத்தை தரித்துக் கொள்கின்றவர்களாயிருக்கின்றார்கள். அதைக் கண்டு ஆச்சரியப்படாதிருங்கள். சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே என்று பரிசுத்த வேதாகமத்திலே நாம் காண்கின்றோம். "கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள் உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்." இவர்கள் வேத வசனத்தை போதித்தாலும், இவர்கள் காண்பிக்கும் வழி, உலக போக்கிற்கு ஏற்புடையதாயிருக்கும். வாசல் விரிவாயும், வழி விசாலமுமாயிருக்கும். காலத்திற்கு ஏற்றபடி இவர்கள் போதனைகளும் மாறுபாடுடையதாக இருக்கும். சில மரங்கள் சீக்கரமாக வளர்ந்து, பார்வைக்கு ஆரோக்கியமும் செழிப்புமுள்ளதாக காணப்படலாம். ஆனால், அந்த மரமானது அது கொடுக்கும் கனிகளினாலே அறியப்படும். அதுபோல, போலியானவைகளை நிஜம் போல பேசி, தேவ பிள்ளைகளை வஞ்சிக்க முயற்சிக்கின்றவர்களை, அவர்களுடைய பேச்சினாலே அல்ல, அவர்களுடைய செல்வ செழிப்பினாலே அல்ல, அவர்களுக்கு பின்பாக செல்லும் ஜனத்தொகையினாலே அல்ல, அவர்கள் காண்பிக்கும் அற்புத அடையாளங்களினாலே அல்ல, மாறாக அவர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையில் காண்பிக்கும் கனிகளினாலே அறியப்படுவார்கள். நம்முடைய ஆண்டவராகிய இயேசு மனத்தாழ்மையும், கீழ்படிவும், சாந்தமுமுள்ளவராக பிதாவாகிய தேவனை பிரியப்படுத்துகின்றாகவும் இந்த உலகத்தினால் பகைக்கப்படுகின்றவருமாக இருக்கின்றார். திராட்சை செடியாகிய அவரரோடு ஒட்டப்பட்டவர்களும், அவரைப் போலவே இருப்பார்கள். அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும் கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது. கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது.

**மத்தேயு 7:16**

**அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்;**

**ஜெபம்**: நித்திய வாழ்வு செல்லும் வழியை காண்பித்த தேவனே, நித்திய ஜீவனுக்கு செல்லாத எந்த வழிகளையும், போதனைகளையும் நான் நம்பி ஏமாறாதபடிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்திச் செல்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| வெள்ளி \| பங்குனி 15 | 📖 மாலை வாசகம் – சங்கீதம் 119:34 |
|---|---|

# எதற்கு இடங் கொடுக்கின்றீர்கள்?

சில விசுவாசிகளுடைய வாழ்க்கையிலே, இந்த உலகத்திலுள்ள போலியானவைகள் அவர்களுக்கு நிஜமாய் தோன்றுவதற்கு, அவர்களுடைய கீழ்படியாமையே காரணமாக இருக்கின்றது. முதலாவதாக, அவர்கள் போலியானவைகளை பார்ப்பதற்கோ அல்லது போலியான பேச்சை பேசுகின்றவர்களின் பேச்சை கேட்பதற்கோ அல்ல போலியானவர்கள் வசிக்கும் இடத்திற்கு செல்வதற்கோ தங்களை விட்டுக் கொடுக்கின்றார்கள். போலியானவைகள் தங்கள் வாழ்க்கையில் உட்பிரவேசிக்க இடங்கொடுக்கின்றார்கள். அது எப்படியெனில், ஆதியிலே தேவனாகிய கர்த்தர் தாமே, ஆதாம் ஏவாள் வாழ்ந்து வந்த ஏதேனின் தோட்டத்தின் மத்தியிலே உலவுகின்றவராக இருந்தார். அவர் அவர்களோடு பேசினார். தேவனாகிய கர்த்தருடைய பேச்சானது, மனிதர்களுடைய பேச்சை போலவோ, அல்லது பிசாசானவனுடைய பேச்சைப் போலவோ தந்திரமுள்ளதல்ல. அவர் தாமே, நித்திய மரணத்திற்கு இட்டுச் செல்லும் மரத்தின் கனியை புசிக்க வேண்டாம் என்று திட்டமானதும், தெளிவானதுமான கட்டளையை ஆதாம் ஏவாளுக்கு கூறியிருந்தார். “ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது” சர்ப்பமானது ஏவாளை வஞ்சிக்க அவள் அதன் பேச்சை கேட்டாள். தேவனாகிய கர்த்தர் விலக்கிய கனியை பார்த்தாள். இவ்வண்ணமாக அவள் தேவனுடைய கட்டளைக்கு கீழ்படியாமல் போக தன்னை விட்டுக் கொடுத்தாள். அவள் பிசாசானவனுக்கு சந்தர்பத்தை கொடுத்தாள். அவன் அவளை தன் வஞ்சக வலைக்குள் சிக்க வைத்தான். இவ்வண்ணமாக சத்தியத்தை நன்றாக அறிந்த சில விசுவாசிகள், சில வேளைகளிலே சத்தியத்தைவிட்டு வழுவிப்போகும் உலகத்திற்கேற்ற போதனைகளை கேட்கின்றார்கள். அது கேட்பதற்கு இதமாக இருக்கின்றது என்றும், நவீன உலகத்திற்கு அது ஏற்புடையதாக இருக்கின்றது என்றும், அவைகள் தங்கள் வாழ்வில் உட்பிரவேசிக்க இடங் கொடுகின்றார்கள். கசப்பான வேர் முளைந்தெழும்ப இடங் கொடுக்கின்றார்கள். கொஞ்சம் புளித்தமாவிற்கு இடங் கொடுகின்றார்கள். இதனால் தங்கள் விசுவாசக் கப்பலை சேதப்படுதிக் கொள்கிள்றார்கள். பிரியமானவர்களே, கற்றறிந்த மாறாத சத்தியத்திலே உறுதியாக நிலைத்திருங்கள். மாறுபாடான சிந்தனைகளை உங்களைவிட்டு முற்றிலுமாய் அகற்றி விடுங்கள்.

**2 கொரிந்தியர் 11:3**

**உங்கள் மனதும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்.**

**ஜெபம்:** ஜீவ மார்க்கத்தை எனக்கு போதித்த தேவனே, உமது கட்டளைகளை நாங்கள் கருத்தாய்க் கைக்கொள்ளும்படி நீர் கற்பித்தீர். உமது பிரமாணங்களைக் கைக்கொள்ளும்படி, என் நடைகள் ஸ்திரப்படுவதாக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கண்கள் நேராய் நோக்கக்கடவது

எங்கு செல்ல வேண்டும், எங்கு செல்லக்கூடாது என்று ஒரு நல்ல தகப்பனானவர், தன் குமாரர்களுக்கு தெளிவாக ஆலோசனைகளையும், எச்சரிப்புக்களையும் கொடுத்திருந்தார். ஒரு நாள் அவருடைய குமாரர்களின் இளையவன், தெரு வழியாக செல்லும் போது, தன் தகப்பன் செல்லக் கூடாது என்ற கூறிய வீட்டிற்கு முன்பாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ட தகப்பனானவர், அவனை கண்டித்து தண்டித்தார். அப்படியிருந்தும், அவன் கண்கள் அந்த வீட்டில்நாட்டமாயிருப்பதை கண்டு அவன் குடும்பத்தார் துக்கமடைந்தார்கள். சில ஆண்டுகள் கடந்து அவன்தன் வயதிற்கு வந்த போது, தகப்பன் போகாதே என்று கூறிய வீட்டிலுள்ள ஒரு இளைஞனோடு நட்புள்ளவனாகி, ஒருநாள் அவர்கள் வீட்டிற்கு சென்றான். அங்கே அவர்களுக்கு இருக்கின்ற சுதந்திரத்தை கண்டு ஆச்சரியப்பட்டான். அவர்கள் வீட்டின் ஒன்றுகூடலில் களிப்பும், ஆடல்பாடல்களும், நல்ல வரவேற்பும் இருந்தது. நன்றாக கற்றிருக்கி ன்றார்கள். நல்ல வேலைகளிலே அமர்ந்து கைநிறைய உழைக்கின் றார்கள். அங்கே கண்டிப்பும் இல்லை, காவலும் இல்லை. யாவரும் எவ்வளவு சந்தோஷமாக இருக்கின்றார்கள். இப்படியல்லவோ வீடும் குடும்பமும் இருக்க வேண்டும் என்று அவர்களோடு ஐக்கியமுள்ளவனாக மாறிவிட்டான். ஏன் இந்த ஐக்கியம்? அவனவன் தன்தன் இருதயத்திற்கு ஏற்றவைகளை செய்வதற்கு அந்த வீட்டிலே எந்த தடையும் இருந்ததி ல்லை. தவறான வழிகளை அவர்களின் பெற்றோர், ஊக்குவிக்காத போதும், தவறான வழிகளின் வாழும் தங்கள் பிள்ளைகளை அவர்கள் கண்டித்து உணர்த்துவதில்லை. அதனால் சட்டமில்லாத அந்த வீட்டிலே குற்றமேதுமில்லாதிருந்தது. பிரியமான சகோதர சகோதரிகளே, சத்திய ஆவியானவர் வரும் போது சகல சத்தியத்திலும் அவர் நம்மை நடத்திச் செல்வார். இன்று சில இடங்களிலே பரிசுத்தமாகுதலைக் குறித்து போதிப்பதில்லை. தவறான வழிகளை கண்டித்து உணர்த்துவதில்லை. ஆதலால் நிஜம் போல காட்சியளிக்கும் போலியான அவ்விடங்களுக்கு செல்லவதை சிலர் விரும்புகின்றார்கள். வஞ்சிக்கப்பட்டு போய்விடாதிருங்கள். கர்த்தர் கிருபையுள்ளவர். அவருடைய பரிசுத்தத்தில் மாறுதல் ஏதுமில்லை. கிருபையின் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.

**யோவான் 16:8**

அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.

**ஜெபம்**: பரிசுத்தமுள்ளதேவனே, மனித இதயத்திற்கு செம்மையாக தோன்றும் வழிகளை நான் நோக்காதடிக்கு, நீர் காட்டிய வழியை என் கண்ணிமைகள்செவ்வையாய் பார்க்கும்படிக்கு,பிரசாசமுள்ள மனக்கண்ணை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மேலான கட்டளை

ஆதி அப்போஸ்தலர்களின் நாட்களிலே, ஆண்டவராகிய இயேசுவின் கிறிஸ்துவின் சீஷர்கள், கிறிஸ்துவின் நற்செய்தியின் நிமித்தம் பல பாடுகளை சகித்தார்கள். எவ்விதமான அநியாயங்களையும் அறியாத அவர்களில் சிலர் அந்நாட்களிலிருந்து நாட்டுச் சட்டத்தின்படி சிறையிலிடப்பட்டிருந்தார்கள். அப்படியாக அவர்களிடம் எந்த துன்மார்க்கத்தனங்களோ, களவுகளோ, பொய்களோ, அநியாயங்களோ எதையுமே அறிந்திராத அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள்? நித்திய மரணத்திலிருந்து மனிதகுலம் விடுதலையடையும் ஒரே வழியை ஜனங்களுக்கு அறிவிப்பது, அந்நாட்களிலிருந்த மதச்சட்டங்களுக்கு விரோதமாக இருந்தது. அப்படியானால் அவர்கள் நற்செய்தியை அறிப்பது தவறான காரியமா? இல்லை, நற்செய்தியை அறிவிக்காமல் இருப்பதே தேவனுடைய பார்வையிலே தவறான காரியமாக காணப்படும். அவர்கள் நன்மை செய்து பாடநுபவிக்கும் போது மாம்சத்திலே போர் செய்யாமல், தங்கள் எஜமானனாகிய கிறிஸ்துவைப் போல, தங்களுக்கு ஏற்பட்ட பாடுகளை சகித்து, ஆவியினாலே வாழ்வின் போராட்டங்களிலே ஜெயங் கொண்டார்கள். நாம் உலகத்திலே வாழ்ந்தாலும் இந்த உலகத்திற்குரியவர்கள் அல்லர். எனினும் நாம் இந்த உலகத்திலுள்ளவர்களை வெறுத்துவிடும்படி அழைக்கப்படவில்லை. தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோவான் 3:16) நாம் மேலான அதிகாரங்களுக்கு எதிர்த்து நிற்கின்றவர்களோ, கலகங்களை ஏற்படுத்துகின்றவர்களோ அல்லர். அதனால் உன்னதத்திலிருந்து கொடுக்கப்பட்ட அதிமேன்மையான கட்டளையை நிறைவேற்றாமல் இருக்க முடியாது. அதுவே நமக்கு கொடுக்கப்பட்ட ஊழியமாக இருக்கின்றது. அந்தப் ஊழியத்தின் பாதையிலே பாடுகளும், அவமானங்களும் நிந்தைகளும் ஏற்படலாம். அவ்வேளைகளிலே நாம் மாம்சத்திலே எதிர்த்து போர் செய்யாமல், கிறிஸ்துவின் சிந்தையைத் தரித்தவர்களாக, பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி, ஆவியினாலே போராட்டங்களை ஜெயங் கொள்ளுகின்றவர்களாக கடந்து செல்வோமாக. அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்த நம் எஜமானனாகிய ஆண்டவர் இயேசுவையே நினைத்துக் கொள்ளுங்கள்.

**மத்தேயு 28:20**

**நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்**

**ஜெபம்:** உலகத்தின் முடிவு பரியந்தம் உங்களோடு இப்பேன் என்ற தேவனே, இளைப்புள்ளவர்களாய் எங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, கிருபையினால் பெலப்படுத்தி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# யாருக்கு பயப்படுகின்றீர்கள்?

ஒருவரும் கெட்டுபோகாமல் தேவ ராஜ்யத்திலே நித்திய ஜீவனை கண்டடைய வேண்டும் என்பது பிதாவாகிய தேவனுடைய சித்தமாக இருக்கின்றது. அப்படியானால், ஆதிமுதல் தேவ ராஜ்யத்திற்கு எதிராக கிரியையை நடப்பித்துவரும் இருளின் ராஜ்யத்தின் அதிகாரியாகிய பிசாசானவனின் நோக்கம் என்ன? ஒருவரும் தேவ ராஜ்யத்தில் நித்திய ஜீவனை அடையாமல், இருளின் ராஜ்யத்திலே நித்திய மரணத்தை அடைய வேண்டும் என்பதே அவனுடைய நோக்கமாக இருக்கின்றது. ஒரு பரிசுத்த சந்ததியை உருவாக்கும்படி தேவனாகிய கர்த்தர்தாமே ஆணும் பெண்ணுமாக ஆதாம் ஏவாளை இருவராக சிருஷ்டித்தார். அந்த சந்ததியை அழிவுக்குட்படுத்தும்படி இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய பிசாசானவனோ அவர்களை வஞ்சித்தான். எனவே, நற்செய்தியை அறிவிக்கும்படிக்கு தடை செய்யும் தீய ஆவியானது பல வழிகளிலே, பல மட்டங்களிலே கிரியை செய்து வருகின்றது. அவை எல்லாவற்றிற்கும் வஞ்சிக்கும் பிசாசானவனே மூலகாரணம் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. எனவே, நற்செய்தியை அறிவிப்பதற்கு ஒருவன் தடையை ஏற்படுத்தினால், அந்த தடையானது எங்கிருந்து உருவாகியது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். சரீரத்தை மட்டும் அழிக்க வல்லவர்களுக்கல்ல, தேவனுக்கே நீங்கள் பயந்திருங்கள். இந்த உலகத்தின் எந்த ஒழுங்குகளும், தேவனுடைய சித்தத்தை உங்கள் வாழ்வில் நிறைவேறாதபடிக்கு தடை செய்வதற்கு நீங்கள் இடம் கொடுக்காதிருங்கள். பரிசுத்த வேதாகமானது பாவமும் அநீதியும் என்று கூறும் காரியங்களை துணிகரமாக பட்டப் பகலில் செய்வதற்கு சிலர் தங்களுக்கு ஆதரவான சட்டங்களை ஏற்படுத்துகின்றார்கள். அவர்களும் அறியாமையினாலே அழிந்து போகாமல், பார்வையடையவேண்டும் என்பதற்காக அன்புள்ள தேவன்தாமே தம்முடைய கிருபையை நீடிய பொறுமையினாலே அவர்களுக்கு வெளிப்படுத்துகின்றார். அதனால், துன்மார்க்கத்தை நடப்பிக்க ஊக்குவிக்கின்றவர்கள் தங்கள் செய்கைகளை குறித்து மேன்மை பாராட்டு கின்றார்கள். நீங்களோ, கீழ்படிவுள்ள தேவ பிள்ளைகளாக, மனத்தாழ்மை அணிந்து கொண்டு, ஆண்டவராகிய இயேசு வழியாக வெளிப் பட்ட நன்மையை ஜனங்களுக்கு அறிவியுங்கள். தடைகளை ஜெபத்தினாலே மேற்கொள்ளுங்கள். உங்கள் அழைத்த சர்வ வல்லமையுள்ள தேவன்தாமே என்றென்றும் உங்களோடிருக்கின்றார்.

**மத்தேயு 10:28**

**ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.**

**ஜெபம்**: நித்திய மகிமைக்கென்று என்னை அழைத்த தேவனே, இந்த உலகத்தினால் உண்டாகும் அழுத்துக்களினால் பின்னிட்டு போகாதபடிக்கு, உம்முடைய சித்தத்தை நிறைவேற்றி முடிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஜீவனின் ஊற்றாகிய இயேசு பரன்

ஒரு தேசத்திலே உள்ள தண்ணீர் வளங்கள் யாவும் இரசாயன தாக்கித்திலே மாசு பட்டதால், அந்த தேசத்தில் குடிகள் வெகுவாய் பாதிக்கப்பட்டார்கள். இந்தப் பிரச்சனையை தீர்க்கும்படி, நல்ல தண்ணீர் வசதிகளை முன்குறித்த நாளிலே ஏற்படுத்துவதாக அந்த நாட்டின் தலைவரானவர் வாக்குரைத்திருந்தார். அந்த நாளுக்கு முன்னதாக, அந்த தேசத்திலுள்ளவர்கள் தங்கள் அறிவுக்கு எட்டியபடி தண்ணீரை சுத்தப்படுத்துவதற்கு பல வழிகளை தெரிந்து கொண்டார்கள். சிலர் அதை ஆதாயத் தொழிலாக செய்து வந்தார்கள். அந்த முறைமைகளிலே சில பிரயோஜனங்கள் இருந்த போதிலும், அடிப்படை பிரச்ச னையானது தீர்க்கப்படாதிருந்தது. நாட்கள் கடந்து சென்று, தலைவரால் முன்குறிக்கப்பட்ட நாள் வந்த போது, மக்களுக்கு வேண்டிய நல்ல தண்ணீரை இலவசமாக விநியோகித்தார்கள். அதைக் கண்ட சிலர், தாங்கள் இதுவரை செய்து வந்த சுத்திகரிப்பு முறைமையை கைவிட மனதில்லாதிருந்தார்கள். வேறு சிலர், தங்கள் ஆதாயத் தொழில் பாதிக்கப்படும் என்ற காரணத்தினால் நல்ல தண்ணீர் விநியோகத்திற்கு எதிரிடையான காரியங்கள் கூறி வந்தார்கள். இன்னும் சிலரோ, எல்லாம் ஒன்றுதான் என்று விவாதித்துக் கொண்டார்கள். மனித குலமானது பாவத்தில் மாய்ந்து நித்தியமாய் அழிந்து போகாதபடிக்கு, நம்மீது அன்புகூர்ந்த பிதாவாகிய தேவன் தாமே, நமக்கு ஒரு இரட்சகரை அனுப்புவேன் என்று வாக்களித்தார். குறித்த காலம் நிறைவேற முன்னதாக, மனித குலமானது, பாவத்திற்கு பரிகாரம் செய்ய பற்பல வழிகளை தெரிந்து கொண்டார்கள். அவைகளால் சில பலன் உண்டாயிருந்தபோதும், அந்த வழிகளினால் பாவத்தின் தோஷத்தை நீக்க முடியவில்லை. முன்குறித்த காலம் வந்தபோது, வாக்களிக்கப்பட்ட இரட்சகராகிய இயேசு வெளிப்பட்டார். விலைமதிக்க முடியாத இரட்சிப்பை அவர் இலவசமாக மனித குலத்திற்கு கொடுத்தார். ஆனால், மனிதர்களில் அநேகர், தங்கள் முன்னைய முறைமைகளையும், பராம்பரியங்களையும் விட்டுவிட மனதில்லாதவர்களாகவும், நித்திய வாழ்வு தரும் இரட்சிப்புக்கு எதிர்த்து நிற்கின்றவர்களாகவும் தங்கள் மனங்களை கடினப்படுத்திக் கொண்டார்கள். ஜீவ தண்ணீராகிய கர்த்தரை அறிய மனதில்லாதவர்ளானார்கள். இரட்சகராகிய இயேசுவின் பாடுகளை அதிகமாக நினைவுகூரும் இந்த நாட்களிலே, மனித குலத்தின் மனக்கடினமானது உடைக்கப்படும்படியாகவும், பிதாவாகிய தேவனுடைய சித்தமானது அவர்களிடத்திலே நிறைவேறும்படிக்கும் கருத்தோட ஜெபம் செய்யுங்கள்.

**எரேமியா 2:13**

**ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்**;

**ஜெபம்**: ஓ தாகமாயிருக்கின்றவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீரண்டைக்கு வாருங்கள் என்று அழைக்கும் தேவனே, உம்முடைய அழைப்பை உணர முடியாமல் இருக்கும் ஜனங்களின் கண்களை தெளிவுபடுத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்து இல்லாமல் ஐக்கியம் ஏது?

ஒரு ஊரிலே சில ஆண்டுகளாக இயங்கி வந்த காப்புறுதி நிறுவனத்திற்கு, ஈடு கொடுக்கும் வகையில், வேறொரு புதிய காப்புறுதி நிறுவனமானது ஆரம்பிக்கப்பட்டது. வாடிக்கையாளர்களை தம்வசப்படுத்திக் கொள்ளும்படிக்கு ஏட்டிக்கு போட்டியாக இந்த இரண்டு நிறுவனங்களும் அயராது உழைத்து வந்தார்கள். ஆண்டுகள் கடந்து சென்றதும், இரண்டு நிறுவனங்களும் கணிசமான அளவு வாடிக்கையாளர்களை தம் வசப்படுத்திக் கொண்டதால், அவர்களுடைய வியாபாரம் நன்றாக ஓடிக் கொண்டிருந்தது. அத்தருணத்திலே, அந்த இரண்டு ஸ்தாபனத்தின் நிர்வாகிகளும் ஒன்றுகூடி, இரண்டு ஸ்தாபனங்களுக்கும் போதுமான வாடிக்கையாளர்கள் இருக்கின்றார்கள் எனவே இனி நாம் எதிராளிகளாக இல்லாமல், நியாயமான வியாபார நெறிமுறைகளை கையாளுவோம் என்று ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, இந்த உலகத்திலே இயங்கி வரும் வியாபார ஸ்தாபனங்கள் இத்தகைய வழிமுறைகளை கையாண்டு வருகின்றார்கள். மேலானவைகளை தேடும்படிக்கு அழைக்கபட நாம், உன்னதமானவருக்கு ஊழியம் செய்துவருகின்றோம். இது போட்டியோ, வியாபாரமோ அல்ல. நற் செய்தியானது முழு உலகத்திற்கும் அறிவிக்கப்பட வேண்டும். எல்லாரும் இரட்சிப்படைய வேண்டும் என்று பிதாவாகிய தேவன் தாமே சித்தமுள்ளவராக இருக்கின்றார் (1 தீமோ 2). ஆனால், இன்று தங்களை கிறிஸ்துவுடையவர்கள் என்று கூறிக் கொள்கின்றவர்கள் கிறிஸ்துவை அறியாமல் அந்தகார இருளில் வாழும் ஜனங்களுள்ள கூட்டங்களோடு, நல்லிணக்க ஐக்கிய ஒப்பந்தம் செய்து கொள்கின்றார்கள். கிறிஸ்துவை அறியாதவர்கள் நம்முடைய எதிரிகள் அல்ல. மாறாக அவர்களும் பிதாவோடும், குமாரனாகிய இயேசுவோடும் ஐக்கியமாயிருப்பதற்கு, இரட்சகராகிய இயேசு வழியாக உண்டான இரட்சிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த ஐக்கியமானது மையினாலும் எழுத்தினாலும், மனித எண்ணங்களினாலும் உண்டாவதில்லை. மாறாக திராட்சை செடி யாகிய இயேசுவோடு ஒட்டப்பட்டிருக்கின்ற கிளைகளே, ஆண்டவராகிய இயேசு வழியாக ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருக்கின்றார்கள். ஆண்டவராகிய இயேசு இல்லாமல் ஐக்கியம் இல்லை. எனவே நாம் நிர்விசாரிகளாக மாறிவிடாதபடிக்கு வேதவார்த்தையின் வெளிச்சத்திலே நம்மை ஆராய்ந்து கொள்வோமாக.

**1 தீமோத்தேயு 2:4**

**எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.**

**ஜெபம்:** தூய ஆவியின் அவிஷேகத்தை எனக்கு தந்த தேவனே, நான் ஆவியை அவித்துப் போடாமலும், உணர்வற்றவனாக உலகத்தோடு சமரசம் செய்கின்றவனாகவும் மாறிவிடாதபடிக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வியாழன் | பங்குனி 21

📖 மாலை வாசகம் – மத்தேயு 6:19 – 21

# தேவனிடத்தில் ஐசுவரியமுள்ளவர்கள்

ஒரு குறிப்பிட்ட ஆலயத்திற்கு சென்று வந்த ஐசுவரியவானின் வியாபாரமானது நன்கு விருத்தியடைந்தால், அவன் வசித்து வந்த ஊரிலுள்ள பல பயிர் நிலங்களையும், கட்டிடங்களையும் தனக்கு சொந்தமாக வாங்கியிருந்தான். அவன் பிள்ளைகளுக்கும், அவர்களுடைய சந்ததிக்கும் வேண்டிய செல்வத்தை சேகரித்து வைத்திருந்தான். பிள்ளைகளும், அவனுடைய வியாபார ஸ்தாபனங்களிலே உத்தியோகத்திலிருந்து, பெருந்தொகையான சம்பளங்களை எடுத்து வந்தார்கள். தான் சென்று வந்த ஆலயத்திற்கு காணிக்கைகளை கொடுத்து, நற்பெயரை பெற்றிருந்தான்.

**1 தீமோத்தேயு 6:18**

**நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும்,**

அந்த ஐசுவரியவான் வசித்து வந்த தெருவிற்கு அப்புறமாக ஒரு சிறிய குடிசையிலே வசித்து வந்த விசுவாசியொருவன், எளிமையான சபையொன்றிற்கு சென்று தேவனை ஆராதித்து வந்தான். தன் குடும்பத்தின் தேவைகளை சந்திப்பதற்கு கடுமையான உழைத்து வந்தாலும், அவனுக்கு தகுந்த வேலை வாய்ப்பு இல்லாதிருந்தது. மழை காலத்திற்கு முன் வீட்டின் கூரையை மேய்வதற்கு அவனிடம் பணமில்லாதிருந்தது. இப்படியாக தெருவின் அப்புறமாக வசித்து வந்த அந்த விசுவாசியானவனின் குடும்பமானது, அப்படைத் தேவைகளை சந்திக்க முடியாமல்? வறுமையிலே வாழ்ந்து வருகின்றார்கள் என்று அந்த ஐசுவரியவானானவன் அறிந்திருந்தும், அறியாதவனைப் போல தன் செல்வ செழிப்போடு வாழ்ந்து வந்தான். இருவரும் ஒருநாள் ஆண்டவர் இயேசுவின் சமுகத்திலே நிற்க வேண்டும். அந்த நாளிலே அந்த ஐசுவரியவானானவன் ஆண்டவர் இயேசு முன்னிலையிலே என்னத்தை கூறிக் கொள்ள முடியும்? நான் என்ன செய்வேன்? வியாபாரம் ஆசீர்வதிக்கப்பட்டது. எனவே, என் பண்டகசாலைகளை இடித்து பெரிதாக்கக் கட்டி, எனக்கும் என் சந்ததிக்கும் வேண்டிய பொருட்களை அங்கே சேமித்து வைத்தேன் என்று கூறிக் கொள்ளலாமோ? பிரியமானவர்களே, இந்த உலக ஐசுவரியத்தின் பெருக்கம் இறுமாப்பை உண்டு பண்ணும். அதை தங்களுக்கென்று சேர்த்து வைக்கின்றவர்களின், மனசாட்சியானது சூடுட்டுண்டு போகும். நீங்ளோ "நன்மை செய்யவும், நற்கிரியை களில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்தியஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைத்திருக்க நாடுங்கள்". தேவனிடத்திலே ஐசுவரியமுள்ளவர்களாக இருங்கள்.

**ஜெபம்**: என் தேவனாகிய கர்த்தாவே, நான் எனக்கென்று பொக்கிஷங்களை சேர்த்து வைக்காமல், உம்மிடத்தில் ஐசுவரியமுள்ளவனாக வாழும்படி உணர்வுள்ள இருயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# புதிய மனுஷனுக்குரிய சுபாவம்

ஒரு மனிதனானவன், எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும், தவறாமல் பண்டிகை நாட்களிலே விரதங்களை கடைப்பிடிப்பதிலே வைராக்கியமுள்ளவனாக இருந்தான். விரதம் பிடித்தால், அந்த மனிதனைப் போல பிடிக்க வேண்டும் என்று ஊராரில் அநேகர் கூறுமளவிற்கு அவன் நேர்த்தியாக விரதங்களை கடைப்பிடித்து வந்தான். அவன் வாழ்விலே தேவ கிருபையானது வெளிப்பட்ட போது, ஆண்டவராகிய இயேசு வழியாகஉண்டாகிய இரட்சிப்பை ஈவாக பெற்றுக் கொண்டான். இரட்சிப்பை பெற்றுக் கொண்ட நாளிலே மனதிலே சொல்ல முடியாத மகிழ்ச்சி. பாவ சாப கட்டுகளிலிருந்து விடுதலையை எந்தக் கிரியைகளோ கிரித்தியங்களோ, பணமோ, விலையொ இன்றி இலவசமாக பெற்றுக் கொண்டான். இப்பொழுதுஅவன் "தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கின்றான்" ஆதலால் அவன் வேதவார்த்தைகளின் வழிநடத்துதலின்படி அவன் இனி பூமிக்குரியவைகளையல்ல, பரலோகத்திற்குரிய மேலானவைகளை நாடித் தேடுவதற்குரிய வழிகள் யாவையும் அவனுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவன் சத்திய வழியிலே நடத்துவதற்கு சத்திய ஆவியானவர் அவனோடிருக்கின்றார். அவனுடைய சக விசுவாசியொருவன் அவனுக்கெதிராக குற்றம் செய்த போது, கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் என்ற உணர்வும் உந்துலும் அவனுடைய சுத்த மனசாட்சியிலே ஏற்பட்டது. அதற்கு எதிராக அவன் மாம்ச சிந்தையானது, நீ மன்னித்தால் உன் குடும்ப கௌரவம் என்னாவது" என்று கூறியது. அவன் ஆவியின் சிந்தைக்கு இடம் கொடாமல், மன்னிப்பதை பின்பு பார்த்துக் கொள்வோம் என்று விட்டுவிட்டான். நாட்கள் கடந்து சென்றதும், அநேக நாட்கள் உபவாசிப்பதற்கு தீர்மானம் செய்து, அந்த நாட்களை வைராக்கியத்தோடு நிறைவேற்றி முடித்தான். ஆனால், அந்நாட்களுக்கு பின்பும் அவன் தனக்கெதிராக குற்றம் செய்த சகவிசுவாசியானவனை மன்னித்துவிட மனதில்லாதவனாகவே இருந்தான். பிரியமானவர்களே, கிறிஸ்துவை அறிய முன்பதாகவும் இத்தகைய விரதங்களை அவன் வைராக்கியத்தோடு ஒழுங்காக நடப்பித்து முடித்தான் அல்லவோ? அப்படியானால் அவன் இப்போது செய்த உபவாசத்தினாலே அவனுக்கு உண்டான பலன் என்ன? தேவவார்த்தைக்கு கீழ்படிவில்லாத உபவாசம் தேவனுடைய பார்வையிலே ஏற்புடையதாக இருக்குமோ?

**கொலோசெயர் 3:10**

**புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே.**

**ஜெபம்:** கிருபையினாலே என்னை இரட்சித்த தேவனே, என் மாம்சத்திலே உண்டாகும் வைக்கிராக்கியங்களைக் குறித்து மேன்மை பாராட்டாமல் உம் வார்த்தைக்கு கீழ்படிந்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உபவாசத்தின் நோக்கம் என்ன?

பாடசாலைக்கு சென்று வந்த தங்கள் மகனானவனுக்கு, அவனுடைய பெற்றோர், குறிப்பிட்ட ஒரு காரியத்தைக் குறித்து, சில முறை அவனுக்கு ஆலோசனையையும், எச்சரிப்பையும் வழங்கி வந்தார்கள். சில நாட்களுக்கு பின்பு, பெற்றோர் எதை செய்ய வேண்டாம் என்று எச்சரித்திருந்தார்களோ, அந்த காரியத்தை அவன் செய்ததால், பாடசாலையிலும் வீட்டிலும் தன்னை பிரச்சனைக்குட்படுத்திக் கொண்டான். மாலையிலே வீடு திரும்பிய அந்த மகனானவன், பெற்றோரிடம் தன்தவறைஅறிக்கை செய்து மன்னிப்பு கேட்டுக் கொண்டான். அன்றிரவு உணவேதும் உண்ணாமல், துக்கத்தோடுபடுக்கைக்கு சென்றான். அவனுடைய நிலைமையை அறிந்த பெற்றோராவர்கள், அவனை அவனை ஆதரவுடன் அணைத்து, இனிமேல் நாங்கள் சொல்லும் அறிவுரைகளை கேட்டு நட என்று கூறி, அவன் விரும்பிய உணவு வகைகளை சமைத்துக் கொடுத்தார்கள். காரணம் என்ன? அவன் சாப்பிடாமல் நித்திரைக்கு சென்றதாலோ? அல்லது அவன் தான் செய்த காரியம் தவறானது என்று உணர்ந்து மனம் வருந்தியாதாலோ? அவன் தன் தவறை உணர்ந்த மனம் வருந்தியதாலேயே அவன் பெற்றோர் அவனுடைய வளர்ச்சியைக் குறித்து மகிழ்ச்சியடைந்தார்கள். ஆண்டுகள் கடந்து சென்று அந்த மகனானவன் வாலிப பிராயத்தை அடைந்ம போது, தன் நண்பர்களுடன் சில நாட்களுக்கு வெளியூக்கு செல்ல அனுமதி கேட்டுக் கொண்டான். பெற்றோர், அவனோடு கூடி செல்பவர்களையும், அவர்கள் செல்ல இருக்கும் இடத்தையும் குறித்து நன்கு அறிந்திருந்ததால், அவனுக்கு அனுமதியை வழங்க மறுத்தார்கள். அவனோ, பெற்றோரின் வார்த்தைக்கு கீழ்படிய மனதில்லாதவனாய், ஒரு நாள் முழுவதும் உணவு உண்ணாமல் இருந்து விட்டான். அதனால் தன் பெற்றோர் மனம் மாறுவார்கள் அல்லது வழிக்கு வருவார்கள் என்று மிகவும் தவறான எண்ணங் கொண்டான். பிரியமானவர்களே, உங்கள் உபவாசங்கள் கர்த்தருக்கு பிரியமாக இருக்கும்படிக்கு, உங்ள கர்த்தருடைய சமுகத்திலே தாழ்த்துங்கள். அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து கர்த்தருடைய வேளைக்கு காத்திருக்கும்படி ஒப்புக் கொடுங்கள். நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை கர்த்தர் ஒருபோதும் புறக்கணிக்க மாட்டார். உங்கள் உபவாசங்கள் நீங்கள் விரும்பிய முடிவை கண்டடையும் இருக்காமல், கர்த்தருடைய சித்தத்திற்கு உட்பட்டதாக இருப்பதாக.

**1 சாமுவேல் 15:22**

**கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ?**

**ஜெபம்:** இருதங்களை ஆராய்ந்தறிகின்ற தேவனே, நான் வழக்குக்கும் வாதுக்கும் நான் விரும்பியவைகளை நடப்பிப்பதற்கும் உபவாசியால், உம்முடைய சித்தத்தின்படி வாழ கீழ்படிவுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தருடைய வழியை அறிந்து கொள்ளுங்கள்

மகா நகரமாகிய நினிவே, அசீரியா ராஜ்யத்தின் தலைநகராக இருந்தது. இவர்கள் புறஜாதி ஜனங்களாக இருந்தார்கள். (ஏசாயா 37:37, 2 இராஜக்கள் 19:36). அந்த மகா நகரமாகிய நினிவேயின் அக்கிரமம் கொடிதாயிருந்ததால், அந்த நகரத்தின் அழிவைக் குறித்து தேவனாகிய கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசி வழியாக எச்சிரிப்பின் செய்தியை அனுப்பினார். அந்த மகா நகரத்தார் உபவாசிக்கும்படி கூடினார்கள். உபவாசத்திற்கு முன்னதாக அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்தார்கள். அதாவது, கர்த்தர் கூறியபடி நாற்பது நாளுக்குள் நினிவே கவிழ்க்கப்படும் என்ற தீர்க்கதரிசன வார்த்தையை விசுவாசித்தார்கள். தங்கள் மனத்தாழ்மையை காண்பிக்கும் பொருட்டு, ராஜாவானவன் தன் ராஜ வஸ்திரத்தை கழற்றிப்போட்டு, இரட்டை உடுத்திக் கொண்டு, சாம்பலிலே உட்கார்ந்தான். நினிவேயின் ஜனங்களை நோக்கி: நீங்கள் "தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள்" என்று கட்டளையை பிறப்பித்தான். "அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக்குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்." பிரியமானவர்களே, நினிவே பட்டணத்தார், தேவனாகிய கர்த்தரின் வார்த்தையை விசுவாசித்து, தங்களை தாழ்த்தி, பொல்லாத வழிகளைவிட்டு திரும்பியதால், அவர்களுடைய உபவாசம் கர்த்தருக்கு பிரியமாக இருந்தது. இன்று சிலர், உபவாச நாள் அவசியமில்லை என்று உபதேசிக்கின்றார்கள். பரிசுத்தமான உபவாச நாளை நியமிப்பது நல்லது. அதற்கு முன்னதாக, நாம் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தால், நம்மை அவருடைய சமுகத்திலே தாழ்த்தி ஒப்புக்கொடுக்க வேண்டும். எடுத்துக் காட்டாக, ஒரு விசுவாசியானவன், தன் உடன் சகோதரன் செய்த குற்றத்தை மன்னிக்க அவனுக்கு மனதில்லை. கசப்பை மனதிலே வைத்து, திரும்பி கொடுக்க ஒரு சந்தர்ப்பத்தை பார்த்துக் கொண்டிருந்தான். இது அவன் மனதிலே மறைந்திருக்கும் பொல்லாத வழி. பிரதானமாக, அவன் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்தால், உபவாசிக்க முன்பதாக, தன் உடன் சகோதரனை மன்னிக்க தீர்மானம் செய்ய வேண்டும். கர்த்தருடைய சித்தம் தன் வாழ்வில் நிறைவேற தன்னை ஒப்புக் கொடுக்கும் போது, அந்த உபவாசம் அவனுக்கு பிரயோஜனமுள்ளதாக இருக்கும்.

**யோனா 3:5**

**அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ்செய்யும்படிக் கூறினார்கள்**

**ஜெபம்:** இரக்கமுள்ள பரலோக தேவனே, நான் உம்மை அறிக்கின்ற அறிவில் வளரும்படிக்கு உம் வார்த்தைக்கு கீழ்படிந்து ஒப்புக் கொடு க்க, எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள் | பங்குனி 25 | 🕮 மாலை வாசகம் - எஸ்றா 8:23

# உபவாசத்தின் எண்ணமும் நோக்கமும்

ஆதி அப்போஸ்தலர்களின் நாட்களிலே, "அந்தியோகியா பட்டணத்தி லுள்ள சபையிலே பர்னபாவும், நீகர் என்னப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனேகூட வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும், தீர்க்கதரிசிகளாயும் போதகர்களா யும் இருந்தார்கள். அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசி த்துக்கொண்டிருக்கிறபோது: பர்னபா வையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித் துவிடுங்கள் என்று பரிசுத்தஆவியா னவர் திருவுளம்பற்றினார். அப்பொ ழுது உபவாசித்துஜெபம்பண்ணி, அவ ர்கள்மேல் கைகளை வைத்து, அவர் களை அனுப்பினார்கள்." உபவாசமும் ஜெபமும் பரிசுத்தவான்களின் வாழ் விலே முக்கியமான காரியங்களாக இருந்து வருகின்றது. தங்கள் மாம் சத்தின் எண்ணப்படி முடிவுகளை எடு க்காமல், தேவ சித்தமானது பரலோ கத்திலே செய்யப்படுவதைப் போல, பூலோகத்திலும் நடத்தி முடிப்பதே அதன் முதன்மையான நோக்கமாகயிருந்தது. சிலர், உபவாசநாட்களிலே, உபவாச காணிக்கைகளை சேகரித்து அதை தர்ம பணமாக, ஏழை எளி யவர்களுக்கு வழங்கி வருகின்றார்கள். அது ஒரு நல்ல கிரியை. இந்த தர்ம காணிக்கையை கிஸ்த்துவை அறிந்தவர்கள் மட்டுமல்ல, அவரை அறியாத வேறு சிலரும் சிறப்பாக நடத்தி வருகின்றார்கள். அப்படி யானால் நாம் நடத்தும் கிரியைகளின் மேன்மை என்ன என்பதை சிந்தி த்துப் பாருங்கள். அக்காலத்திலே ஆண்டவர் இயேசுவின் அப்போஸ் தலர்கள் உபவாசித்து ஜெபித்தார்கள் எனவே நானும் உபவாசித்து ஜெபிப்பேன் என்று ஒரு நோக்கமும் வழிநடத்துதலுமில்லாமல் உப வாச நாட்களை அனுசரிக்கக்கூடாது. இந்த பகுதியிலுள்ளவர்கள், இத் தனை பத்து நாட்களாக உபவாசிக்கின்றார்கள், மற்றய பகுதியினர் இரு பது நாட்களாக உபவாசிக்கின்றார்கள், எனவே நாமும் சபையாக உப வாசிப்போம் என்னும் எண்ணமானது நோக்கமற்றதும் தவறானது மாக இருக்கும். மற்றவர்களுடைய கட்டுக்களும், நுகத்தடிகளும் உடை க்கப்பட வேண்டும் என்ற நோக்கம் நல்லது. ஆனால் நாம் பெற்றுக் கொண்ட விடுதலையை கிறிஸ்துவுக்குள் நாம் காத்துக் கொள்ள வேண்டும்.

**அப்போஸ்தலர் 13:2**

அவர்கள் கர்த்தருக்கு ஆரா தனை செய்து, உபவாசித்து க்கொண்டிருக்கிறபோது: பர் னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்து க்காக அவர்களைப் பிரித் துவிடுங்கள்என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார்.

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்காக என்னை அழைத்த தேவனே, நான் என் அழைப்பின் பிரதான நோக்கத்தை ஒருபோதும் மறந்து போய் விடாத படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# முற்காலத்து நற்கிரியைகள்...

ஒரு ஊரிலே வாழ்ந்த சில ஜனங்கள், சமாதானமான வாழ்வைத் தேடி தாங்கள் பிறந்த ஊரைவிட்டு வெளியூரொன்றிற்கு சென்று தஞ்சம் புகுந்தார்கள்.சென்றிருந்த சுபீட்சம் அந்த நிறைந்த ஊரிலுள்ள ராஜாவும் அவர்ளை வரவேற்று, அந்த ஊரின் பிரஜைகளாக ஏற்றுக் கொண்டார். இந்த சிலாக்கியமானது, அவர்களின் தகுதியடைப்படையிலே அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. மாறாக அந்த ஊரின் ராஜாவின் தயவினாலே பெற்றுக் கொண்டார்கள். புதிய ஊரிலிருந்த யாவும் நன்மைக்கேதுவானவைகளாக இருந்தது. ஆனாலும். ஆண்டுகள் கடந்து சென்ற போது, தாங்கள் விட்டுவந்த ஊரிலுள்ள கலச்சாரத்தையும், பாரம்பரியங்களையும், நல்வழி முறைகளையும் நாங்கள் பேணிக் காக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டார்கள். அவர்கள் பிறந்த ஊரிலே இருந்த கலாச்சாரத்திலே நல்ல காரியங்கள் இருந்தது ஆனால் அந்த நல்ல காரியங்கள் ஒன்றும் அடிப்படைப் பிரச்சனையை தீர்க்கவில்லை. பல தலைமுறைகளாக பின்பற்றி வந்த பாரம்பரியத்தினால் அவர்களுக்கு சமாதானம் உண்டாவில்லை. அப்ப டியானால், அந்த பழைய வாழ்க்கை முறைமைகளை சமாதானமுள்ள புதிய வாழ்க்கை முறைக்குள் கொண்டு வருவதன் நோக்கம் என்ன என்று ஆராய்ந்து பார்க்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தது. காலப் போக்கிலே, அவர்கள் வந்து தஞ்சமடைந்த புதிய ஊரையும் தங்கள் பழைய ஊரைப் போல மாற்றிவிட்டார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, "முற்காலத்திலே இவ்வுலக வழக்க த்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப் பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டீர்கள்." அந்த வாழ்க்கை முறைமையிலே சில நன்மைகள் இருந்தபோதும், அவைகள் நம்முடைய அடிப்படைப் பிரச்சனையை தீர்க்கவில்லை. நாம் கோபாக்கினையின் பிள்ளைகளாகவே இருந் தோம். இப்போது ஆண்டவராகிய இயேசு சிலுவையின் சிந்தின இரத்தத்தினாலே பரலோக சமாதானத்தை பெற்றுக் கொண்டோம். மறுப டியும், பழைய பாரம்பரிய, கலசாச்சார, நற்கி ரியைகளினால் நாம் பெற்றுக் கொண்ட சமாதானத்தை இழந்து போய்விடாதபடிக்கும், தேவனுடைய கிருபையை விருதாவாக்காதபடிக்கும் எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். நீதியானது நம்முடைய பழைய பாரம்பரிய கிரியைகளினாலே உண்டாகுமென்றால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே.

**கொலோசெயர் 1:20**

**அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி**,

**ஜெபம்**: இளைப்பாறுதல் தரும் தேவனே, என்னை சூழ்ந்து கொள்ளும் பிரச்சனைகளை கண்டு நான் கலங்கி தவிக்காதபடிக்கும், உம்முடைய வார்த்தையை அறிக்கையிடுகின்றதில் உறுதியாய் இருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பெற்றுக் கொண்ட சுதந்திரத்தின் மேன்மை

மலைப் பிரதேசம் வழியாக ஒரு குறிப்பிட்ட ஊருக்கு சென்று கொண்டிருந்த இரண்டுவாலிபர்களை, இனந்தெரியாத சில கொள்ளைக்காரர் வழி மறித்து, அவர்கள் கைகளையும் கால்களையும் கட்டிப் போட்டு, வண் டியொன்றிலே அவர்களை கடத்திச் சென்றார்கள். பல மாதங்க ளாக அந்த வாலிபர்கள் அந்தக் கொள்ளைக்காரரின் அநியாய வேலை களை செய்யும்படி துன்புறுத்தப்பட்டார்கள். அடிமைத்தனத்திலே வாழ்ந்து வந்த வாலிபர்களுக்கு, கொள்ளைகாரர் தங்கள் அநியாயத்தின் ஆகாரத்தை உண்ணவும், தாங்கள் அருந்திய மதுபானத்திலே அவர்களுக்கும் பங்கேற்பதற்கும் எந்த தடையும் இருந்ததில்லை. அநேக நாட்களாக அந்த வாலிபர்களை தேடிச் சென்ற பொலிசார், அவர்கள் இருக்கும் இடத்தை கண்டறிந்து, அவர்களை விடுதலையாக்கி, அவர்களுடைய ஊருக்கு அவர்களை கொண்டு வந்து, அடிமைத்ததனத்தின் வாழ்விலிருந்து சுதந்திரமாக வாழும்படி வழியை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். சில நாட்கள் சென்றபின்பு, அந்த வாலிபர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: கொள்ளைக்காரரோடு இருக்கும் போது, நாங்கள் விரும்பியதை உண்ணவும், குடிக்கவும், களிப்பாக இருக்கவும் எந்தத் தடையும் இல்லாதிருந்ததே என்று ஆசையோடு கூறிக் கொண்டார்கள். ஆனால், அவர்கள் தாங்கள் சிறைப்படுத்தப்பட்டு, அடிமைத்தனத்தில் வாழ்ந்தோம் என்பதைக் குறித்து உணர்வற்றவர்களாவே இருந்தார்கள். பிரியமானவர்களே, கிறிஸ்துவை அறியாத நாட்களிலே, நாமும், பாவ சாபங்களின் அடிமைத்தன கட்டிற்குள் வாழ்ந்து வந்தோம். "அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்." (ரோமர் 6:11-13). பழைய வாழ்விற்குரிய அடித்தனத்தின் கட்டுகளை மறுபடியும் இச்சிக்காமல், கர்த்தர் கொடுத்திருக்கும் சுதந்திரத்தை மேன்மையயை உணர்ந்தவர்களாக வாழக் காடவோம்.

**ரோமர் 6:6**

நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.

**ஜெபம்**: இருளின் அதிகாரத்தினின்று என்னை விடுவித்த தேவனே, நான் பெற்றுக் கொண்ட சுதந்திரத்தின் மேன்மையை உணரத்தக்கதாக பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனதிலுள்ளவைகளை அறிந்தவர்

“இவர்கள் எவ்வளவு கற்றாலும் திருந்தாத ஜனங்கள், எத்தனை நன்மைகளை பெற்றுக் கொண்டாலும் நன்றியற்ற மனதையுடையவர்கள். நான் நன்மை செய்து பட்ட பாடுகள் போதும்” என்று சில விசுவாசிகள் சொல்வதை கேட்டிருக்கின்றோம். அப்படி சொல்லவிட்டாலும், அப்படிப் பட்ட எண்ணங்கள் மனதில் தோன்றுவதுண்டு. அதனால், சிலர், தங்கள் மனதை கடினப்படுத்தி விடுவதால், தாங்கள் எதற்காக அழைக்கப்பட்டோம் என்பதை மறந்து போய்விடுகின்றார்கள். திராட்சை செடியானது, இனி நான் இந்த மனிதர்களுக்கு சுவையான கனிகளை கொடுக்க மாட்டேன் என் றால், அந்த திராட்சை செடியினால் என்ன பலன்? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதாமே, நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார் நாம் மண்ணென்று நினைவுகூருகிறார். மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை. தீர்க்கதரிசிகளாலே தன்னைக் குறித்து முன்கூறப்பட்ட காரியங்களை அவர் அறிந்திருந்தார். மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே தனனைப் பின்வற்றி வந்த அன்பான சீஷர்களும் தன்னிமித்தம் இடறலடைவார்கள் என்றும் அறிந்திருந்தார். ஆசாரியர்கள், பரிசேயர், சதுசேயர், வேதபாரகர் என்பவர்களின் தீமையான சிந்தைனைகளையும், தன்னோடு உணவுண்டானாகிய யூதாஸ் தனக்கு துரோகம் செய்வான் என்பதையும், பிரதான சீஷனாகிய பேதுரு தன்னை மறுதலிப்பான் என்பதையும் முன்கூட்டியே அறிந்திருந்தார். அப்படியிருந்தும், அவர்களுடைய பெலவீனம் குறித்து நொந்து கொள்ளாமல், பிதாவாகிய தேவனுடைய சித்தமானது தன்னில் பரிபூரணமாக நிறைவேறும்படிக்கு, எல்லாருக்காவும் தன்னை பலியாக ஒப்புக் கொடுத்தார். அவர் அதைக் அரை மனதோடேயோ, அல்லது மனக்கசப்போடேயோ செய்து முடிக்கவில்லை. தன்னை சிலுவையிலறைந்து துன்பப்படுத்தி னவர்களுக்காவும் பரிந்துபேசி அன்போடு ஜெபம் செய்தார். பிரியமான சகோதர சகோதரிகளே, நம்முடைய மீட்பராகிய இயேசுவின் சிலுவையின் தியாகத்தை தியானிக்கும் இந்த நாளிலே, அவரைப் போலவே, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நம் வாழ்விலே வாஞ்சையோடு நிறைவேற்றி முடிக்க நம்மை அர்ப்பணிப்போமாக.

**லூக்கா 22:42**

**ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.**

**ஜெபம்:** என்னை வேறுபிரித்த தேவனே, மற்றயவர்களுடைய பெலவீனங்களினாலும், குறைவுகளினாலும் நான் சோர்ந்து போகாதபடிக்கு, பெற்ற பணியை நிறைவான மனதுடன் செய்துமுடிக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாழ்வின் மேன்மை

அக்காலத்திலே வாழ்ந்து வந்த ஜனங்களில் சிலர், பரிசேயர் வேத பாரகர், சதுசேயர், நாட்டின் அதிகாரிகள் என்று பற்பல பிரிவுகளையுடைய சிறப்பு குடிமக்களாக வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் தாங்கள் கற்றவர்கள், மதவைராக்கியமுடையவர்கள், சட்டத்தை அமுல்படுத்து கின்றவர்கள், நியாயம் விசாரிக்கின்றவர்கள் என்று தங்கள் தங்கள் கொள்கைகளையும், நம்பிக்கைகளையும் குறித்து மேன்மை பாராட்டி வந்தார்கள். இப்படியாக, தங்கள் தகுதிகளை குறித்து பெருமை பாராட்டி வந்த அவர்களுடைய கல்வி அறிவும், மத வைராக்கியமும், சமூக அந்தஸ்தும், அதிகாரமும், அவர்களுடைய மனங்களை, கடினப்படுத்தியதால், பாவமறியாத இயேசுவை சிலுவையில் அறைவதற்கு அக்கிரமசெய்கைக்காரரோடு இசைந்து கொண்டார்கள். (அப் 2:36, 4:10).

**கலாத்தியர் 6:14**

**நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக;**

உலகத்தினாலும், மாம்ச சிந்தையினாலும் உண்டாகும் அறிவினால் ஒருவரும் மெய்யான தேவனை அறிந்து கொள்ள முடியாது. முன்னொரு காலத்திலே நாமும் அப்படிப்பட்ட நிலைமையிலே வாழ்ந்து, நம்முடைய வழிகளை குறித்து நாமே மேன்மை பாராட்டி வந்தோம். அந்த வழிகள் விசாலமானவைகள். அந்த வழிகள் இந்த உலகத்தின் அங்கீகாரத்துக்குரியவைகளாக இருந்தது. ஆனால், அவைகளின் முடிவோ அழிவு என்று வேத வார்த்தைகள் கூறுகின்றது. நாம் அழியாமையை அடைந்து கொள்வதற்காக, பரலோகம் செல்லும் வழியை காண்பிக்கும் படிக்கு ஆண்டவராகிய இயேசு இந்த பூமிக்கு வந்தார். பரிசுத்தராகிய இயேசு, மனித குலத்தின் பாவங்களை தன்மேல் சுமந்து, அதற்குரிய பரிகாரத்தை செலுத்தினார். அவருடைய நாமத்தை விசுவாசிப்பவர்கள் யாவருக்கும் நித்திய வாழ்வை அடையும் ஜீவவழியை உண்டு பண்ணினார். பிரியமானவர்களே, ஒருவேளை நீங்கள் ஆண்டவர் இயேசுவை அறியாதவர்களாக இருந்தால், நீங்கள் எந்த நிலைமையிலிருந்தாலும், நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளும் படிக்கு, இன்று உங்கள் வாழ்க்கையை அவரிடம் ஒப்புக் கொடுங்கள். நீங்கள் ஆண்டவரை அறிந்தவர்களாக இருந்தால், இந்த உலகத்தினாலும், மாம்ச சிந்தையினாலும் உண்டான பிரிவுகள், உயர்வுகள், கிரியைகளைக் குறித்து மேன்மைபாராட்டி, மனதைக் மறுபடியம் கடினப்படுத்திக் கொள்ளாமல், இந்நாளிலே உங்கள் வாழ்க்கையை சற்று ஆராய்ந்து பாருங்கள். எப்பொழுதும் மனத்தாழ்மையோடு, கிறிஸ் துவின் சிலுவையை குறித்தே மேன்மை பாராட்டுங்கள்.

**ஜெபம்**: என்மீது அன்பு கூர்ந்த தேவனே, நான் மறுபடியும் என்னை மெச்சிக் கொள்ளாதபடிக்கு, உம்முடைய கிருபையினாலே உண்டான இரட்சிப்பை உயர்ந்தும் உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விடுதலை எதனால் உண்டானது?

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனாவன், பல ஆண்டுகளுக்கு முன் பதாக, தப்பித்துக் கொள்ளமுடியாத பெருங்குற்றமொன்றிலே ஊராரின் கையிலே அகப்பட்டிருந்தான். ஊரின் மூப்பர் சங்கமானது அவனு டைய குற்றத்தை விசாரிக்க கூடிவருதற்கு முன்னதாக, அவன் தன் குற் றத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரிடம் சென்று அவர்கள் காலிலே விழுந்து மன்னிபபை கேட்டு, அவர்க ளுக்கு ஏற்பட்ட பாதிப்பை நிவர்த்தி செய்வதற்கு தன்னால் முடிந்த உத விகளை செய்வதாக வாக்குக் கொடு த்தான். மூப்பர் சங்கமானது கூடி வந் தபோது, அவனுடைய மனம்வருந் தலை அவர்கள் கண்டு, அவனுடைய குற்றத்தை அவனுக்கு மன்னித்து விட் டார்கள். காலங்கள் கடந்து சென்று, அவன் திருமணமாக தன் சொந்தக்குடும்பத்தாரோடு வாழ்ந்து வந்தான். அவனுடையமகனானவன், வாலிப பருவத்தை அடைந்தபோது, அவ னும் ஒரு குற்றத்திலே அகப்பட்டுக் கொண்டான். அவனுடைய தகப்பனான வனோ, மூப்பர் சங்கத்தின் முன்னிலையிலே நின்று, தன் மகனானவனு டைய குற்றத்தை மறைப்பதற்காக, தனக்கு ஆதாரமான சாட்சிகளை ஏற்படுத்துக் கொண்டு, குற்றம் செய்த மகனானவன் நிரபராதி என்று நிரூபித்து, அந்த வழக்கிலே வெற்றி பெற்றுக் கொண்டான். அந்தத் தக ப்பனானவன், பல ஆண்டுகளுக்கு முன் தனக்குண்டான தயவை மறந்து போனான். பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் தேவனை அறியா மல் அக்கிரம செய்கைக்காரராக இருந்தபோது, தேவ கிருபையினாலே, விசுவாசத்தைக் கொண்டு பெரும் விடுதலையை இலவசமாக பெற் றுக் கொண்டோம். அந்த விசுவாசத்திலே மனத்தாழ்மையும் கீழ்படிவும் உண்டாயிருந்தது. ஆனால், காலங்கள் கடந்து செல்லும் போது, சிலர் அந்தத் தகப்பனானவனைப் போல, தங்கள் வாழ்க்கையிலே உண்டா கும் போராட்டங்களை, மாம்சத்திலே எதிர்வாதம் செய்து, சாதூரியமாக தங்களை நீதிமான்களாக காண்பிக்க முயற்சி செய்கின்றார்கள். ஒரு வேளை மனிதர்களுடைய சங்கத்தின் நடுவிலே நாம் எதையும் வென்று கொள்ளலாம் ஆனால் கர்த்தருடைய பிரகாரங்களிலே யார் நீதியைக் குறித்து வாதாட ஜெயிக்க முடியும்? அவருடைய சமுகத்திலே மனந் திரும்புதல் இல்லாமல், பாவ மன்னிப்பு உண்டாகுவதில்லை. இருதய ங்களை ஆராய்ந்தறிகின்ற தேவன் மனிதர்களுடைய சிந்தையை அறிந் திருக்கின்றார். எனவே தேவ கிருபையை பெற்றுக் கொள்ளும்படிக்கு அவருடைய சமுகத்திலே நம்மைத் தாழ்த்தி ஒப்புக் கொடுப்போமாக.

**எபேசியர் 2:5**

**அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, என் சொந்த பெலத்தினாலே பாவங்களை மேற்கொள்ள மறுபடியும் முயற்சி செய்யாமல், உம்முடைய வார்த்தையின் வழியிலே தேவ பயத்தோடு வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உங்களுக்கு சமாதானம்

“வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்” (யோவான் 20:19).

**யாக்கோபு 4:6**

**ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது.**

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு, மரணத்தையும் பாதாளத் தையும் ஜெயங் கொண்டு உயிர்த்தெழுந்த இந்தக் நாளை நினைவு கூரும் இந்நாளிலே, கர்த்தர் நமக்கு கொடுத்த மனச்சாமாதானம் நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் நிலையாக இருக்கின்றதா என்பதை நாம் ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். ஆரம்ப நாட்களிலே நன்றாய் ஓடிய சில விசுவாசிகளின் மனதிலே, பாதி வழியிலில் ஏன் சந்தேகங்களும், குழப்பங்களும் தோன்றுகின்றது? மேலான இரட்சிப்பை கிருபையினாலே பெற்றுக் கொண்டதை மறந்து, தங்கள் கிரியை களினாலே வாழ்வின் போராட்டங்களை ஜெயம் கொள்ள முயற்சிக்கும் போது, அவர்கள் தங்கள் மனதிலே பல குழப்பங்களை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். உண்மையான மனம்வருந்தலும், மனம்திரும்புதலும் ஒரு விசுவாசியின் மனதிலே உண்டாகும் போது அங்கே மனத்தாழ்மை யோடு கூடிய நிபந்தனையற்ற கீழ்ப்படிவு உண்டாகின்றது. அப்படிப்பட்ட இருதயமானது, தேவனுடைய வார்த்தையாகிய விதை வளர்ந்து பலன் கொடுக்கும் நல்ல நிலமாகவே இருக்கின்றது. ஆனால் ஒரு விசுவா சியானவனின் வாழ்விலே தன் கிரியைகளினால் உண்டாகும் சுயநீதி தலை தூக்கும் போது, பெருமையினால் உண்டாகும் அகங்காரம் அவன் மனதிலே குடிகொள்கின்றது. அங்கே மனக்கடினம் உண்டாகின்றது. ஆனாலும், ஒருவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்று தன் ஏக சுதனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பிய பிதாவாகிய தேவன்தாமே, நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார். இது இன்னும் மனந்திரும்பாத மனிதர்களை குறித்தது மட்டுமல்ல, மனந்திரும்பிய பின்மறுபடியும் தங்கள் மனங்களை கடினப்படுத்தி கொண்டிருக்கும் விசுவாசிகளுக்குமுரியதாகும். நீங்களோ, எப்போதும் மனந்திரும்புகின்ற மனதையுடையவர்களாக இருங்கள். எந்த காரியத்தைக் குறித்தும் பெருமையடையாதபடிக்கு, மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள். கிருபை நிறைந்த தேவன் உங்களை தமது விருப்பம் போல் நடத்தி, முடிவிலே மகிமையிலே சேர்த்துக் கொள்வாராக.

**ஜெபம்**: பாவ சாபத்திலிருந்து என்னை விடுதலையாக்கிய தேவனே, நான் உம்மிடமிருந்து பெற்றுக் கொண்ட சமாதானத்தை காத்துக் கொள்ளும் படிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஜெபம் செய்வோம்!

உங்கள் வாழ்க்கையை சர்வ வல்லமையுள்ள பிதவாகிய தேவனிடம் ஒப்படைக்க விரும்பினால், பின்வரும் ஜெபத்தை கருத்தோடு ஏறெடுங்கள்!

பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் அன்பான பிதாவே,

நீர் சர்வ வல்லமையுள்ள தேவன்! உம்முடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவை எங்களுக்காக தந்தருளினதிற்காக உமக்கு நன்றி! இயேசுக்கிறிஸ்துவுக்கூடாக நீர் அனுப்பின தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவருக்காக உமக்கு நன்றி!

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து இப்பூமியில் மனிதனாக வந்து, பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்து, என்னை மீட்பதற்காக பாடுகள்பட்டு தம்முடைய பரிசுத்தமான இரத்தத்தை சிந்தி, சிலுவையிலே எனக்காக மரித்து, பாவத்தை வென்று உயிர்ந்தெழுந்தார் என முற்றிலும் விசுவாசிக்கின்றேன். இன்று நான் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவை என் வாழ்வின் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கின்றேன்! இதுவரைகாலமும் நீர் என்னை நடத்தி வந்த உம்முடைய மிகுந்த இரக்கங்களுக்காக உமக்கு ஸ்தோத்திரம்!

மற்றவர்களை குறித்ததான கசப்பை என் மனதில் இருந்து அகற்றிவிட இன்று நான் தீர்மானிக்கின்றேன்! பிறர் எனக்குச் செய்த குற்றங்களை மன்னித்துவிட இன்று நான் தீர்மானம் எடுக்கின்றேன். பரிசுத்த ஆவியானவரே எனக்குத் துணைசெய்யும்!

என்னுடைய பாவ பழக்கங்களை விட்டுவிட இன்று நான் தீர்மானிக்கின்றேன். நான் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களை மன்னித்தருளும்! இன்னும் நான் உணராமல் செய்துவரும் தீய பழக்கங்கள் என்னில் இருக்குமாயின் அவைகளை எனக்கு வெளிப்படுத்தும். தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்.வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.

தேவனே, மோட்ச வாழ்க்கைக்கு அவசியமானதை என் வாழ்க்கையிலே முதலாவதாக நான் தேட என்னை வழி நடத்தும். இன்று நான் என்னுடைய தேவைகளை உம்முடைய பாதத்தில் வைக்கின்றேன், என் இக்கட்டான சூழ்நிலையிலிருந்து என்னை பூரணமாக விடுவித்து தேவ சமாதானம் என் உள்ளத்தை ஆழ கிருபை செய்தருளும்.

கர்த்தாவே நீர் என்னுடைய ஜெபத்தைக் கேட்டு அதற்கு பதில் தருகின்ற ஜீவனுள்ள தேவன் என்று நான் முற்றிலும் விசுவாசிக்கின்றேன்! உம்மை உண்மையாய்த் தேடுகிற யாவருக்கும் சமீபமாகவுள்ள கர்த்தர் நீர்! பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவி செய்வது உமக்கு லேசான காரியம்!

காரிருள் சூழ்ந்திருக்கும் இந்த உலகத்திலே, உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்திலே ஜீவிக்க பிரகாசமுள்ள மனக் கண்களைத் தாரும்.

எனக்காக மரித்து உயிர்த்த கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபம் கேட்கிறேன் நல்ல பிதாவே, ஆமென்!

# அன்பான வாசகர்களுக்கு!

## உங்கள் **‘உள்ளான மனிதன்’** பிரதியை பெற்றுக் கொள்ளுங்கள்

உள்ளான மனிதன் சஞ்சிகையை ஒரு சபையினூடாக பெற்றிருந்தால், தொடர்ந்தும் மாதாந்தர பிரதியை பெற்றுக்கொள்ள, அந்த சபையின் போதகரை தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் வசிக்கும் இடத்தில் உள்ள சபையின் ஊடாக உள்ளான மனிதன் சஞ்சிகை விநியோகிக்கப்படாவிடில், அடுத்த பக்கத்திலுள்ள படிவத்தில் உங்கள் விபரங்களை பதிவு செய்து, இந்தியாவில் இந்த சஞ்சிகையை அச்சிட்டு வெளியிடுகிறவர்களின் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

மாதம் இந்த சஞ்சிகையை வாசித்த பின்பு மற்றய சகோதர சகோதரிகளுடனும் இதனை பகிர்ந்து கொள்ளுங்கள். இரட்சிப்பு தேவனிடத்திலிருந்து வரும்!

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**. (யோவான் 3:16)

அந்த ஆச்சரியமான மாறாத தேவ அன்பு இன்றும் யாவரையும் இருளின் அதிகாரத்திலிருந்து ஆச்சரியமான தேவ ஒளிக்குள் வரும்படியாய் அழைக்கின்றது. ஆமென்!

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909 gtachurch.ca**

உள்ளான மனிதன் மாதாந்தர இலவசப் பிரதி

# விண்ணப்பப் படிவம்

**முழுப் பெயர் FULL NAME:**

______________________________________________

______________________________________________

**முகவரி ADDRESS:**

(தபால் உங்கள் இருப்பிடத்திற்கு வந்தடைய தேவையான முழு முகவரி விபவரங்களையும் குறிப்பிடவும்)

______________________________________________

______________________________________________

______________________________________________

**மேலதிக விபரங்கள்**

**whatsApp** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

**Viber** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

(**whatsApp Viber** வாயிலாக பெற விரும்பினால் உங்கள் கை தொலைபேசி இலக்கத்தைக் கீழே குறிப்பிடவும்)

**கை தொலைபேசி MOBILE PHONE:** ______________________

**மின் அஞ்சல் E-MAIL:**

______________________________________________

**விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052,**
**MARKHAM, ON L3S 4T1 - CANADA**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE-MENTIONED ADDRESS

210 Silver Star Blvd., Unit 807, Scarborough, ON M1V 5J9
www.gtachurchnet.ca ☎ 416.613.2909